50

2005 மார்ச் 01

THE EXPRESS INSTITUTE KOPAY

A BOON TO STUDENTS

# வரதம்


பொன் விழாக்காணும் எம் அதிபரும், கணித ஆசானுமாகிய

**திரு. தம்பிப்பிள்ளை வரதராஜா**

அவர்களை மேலும் பல்லாண்டு சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

The Express Institute
Irupalai, Kopay.

ஆசிரியர்களும், மாணவர்களும், ஆளணியினரும்.



வெளியீடு:

வரதர்

பொன்விழாச் சபை

The Express Institute
Irupalai, Kopay.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று பொன்விழா காணும்
# விழா நாயகன்

எனது ஆசான் மட்டுமல்ல
எமது குடும் உறுப்பினர்களுக்கும்
அவர்தம் வாரிசுக்களினதும்
ஆசானாக இருந்து வளர்ந்து வருகிறார்

## அகவை 50இல்

எம் ஆசானை வாழ்த்துவதில்
பெருமகிழ்வுறுகிறோம்

A.M.T THANANAYAGAM

A
M
T



## AMT TRANSPORT & CONSTRUCTION

230,232 Wolfenhal Street, Colombo - 13
Tel 2451716, 2451558, 2470465, 4618687
5365166, 5363923, 021-222-5784
Fax: 94-11-2342138 E-mail: Amtbowser @ Sltnet.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரதம்




## 50வது அகவை

# பொன்விழா சிறப்பு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடவுள் வாழ்த்து



ஏழில் ஓங்கு இடர் அகல இனிதாக எல்லாம் நடக்க
இருபாலை உறைகின்ற கற்பகனே
செய்தொழிலே தெய்வமெனச் சேவிக்கும் உன்னடியார்
எல்லா நலனும் பெற்றெழவே அருள் நிதியே.

The Express Institute
Irupalai, Kopay.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் எழுக !

எங்கள் வாழ்த்துக்கள்...




அகவை 50 ஐக் காணும்

இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் அதிபரும் கணித ஆசானுமாகிய

உயர்திரு. தம்பிப்பிள்ளை வரதராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரதர் பொன் விழாச்சபை




தலைவர்
**பண்டிதர் கு.துரைராஜா**
(சைவப்புலவர்)



பொருளாளர்
**திரு.சி.பாலச்சந்திரன்**
**(Sp.Trd.Sc)**





இணை செயலாளர்கள்

**திரு.ஐ.றமேஷன் B.A** **திரு.ந.மோகநேசன் B.A**

## நிர்வாகக்குழு உறுப்பினர்கள்

திரு.கி.தங்கவடிவேல் *J.P*
திரு.க.பார்த்தீபன்
திரு.கு.கஜேந்திரன்
திரு.சி.சதீஸ்குமார்
திரு.த.தர்மகுலசிங்கம்
செல்வன்.க.சஞ்யே

திருமதி.ஜெ.ராஜேந்திரன்
செல்வி.G.றட்ணசாமி
செல்வி.வ.ஜெகதீஸ்வரன்
செல்வி.ம.சின்னத்துரை
செல்வி.ஜொய்சி நவநேசன்
செல்வி.க.தாட்சாயினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன் மலர் தாங்கி நிற்கும் பொற்கலசங்கள்

கடவுள் வாழ்த்து

01. வரவேற்புப் பாடல்

02. விழா நாயகருக்கான வாழத்துக் கவி

03. பொன்விழாத் தலைவரின் சிறப்பு வாழ்த்துரை

04. விழா நாயகரது ஆசான்களின் ஆசிச் செய்திகள்

05. பண்பாளர்களின் பசுமையான ஆசிகள்

06. பெருமையுடன் பெற்றோர்கள்

07. பழைய மாணவர்களின் ...........

08. நிறுவன ஆசிரியர்கள் நெஞ்சங்களிலிருந்து

09. மாணவ மணிகளின் மனதிலிருந்து

10. நண்பர்களின் அன்புள்ளங்களிலிருந்து

11. ஏற்புரை

12. நன்றியுரை

13. நிறுவன கீதம்

The Express Institute
Irupalai, Kopay.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவேற்புப் பாடல்

## வாஞ்சை உள்ள ஆர்வலரே
## வருக! வருக!

வருக நீங்கள் வருகவே! வாசல் விளக்கெரியுது
வந்து வாழ்த்துக் கூறுங்கள் வசந்த காலத் தென்றல் போல்
வருக நீங்கள் வருகவே! வாசல் விளக்கெரியுது
இருபாலை எக்ஸ்பிறஸின் அதிபர் வரதராஜா
இமயச் சிகரம் போலவர் இன்றகவை ஐம்பது

வருக ....

பிறந்த நாளில் பிறந்த இன்பம் பெருகி ஓடும் அன்பிலே
வளர்ந்த நாளில் வளர்ந்த சேவை வானம் போலப் பெரியது
வாழ்த்து வெள்ளம் தடையை மீறிப் பாய்ந்து செல்லும் அவரிடம்
ஆசையாய் நேசமாய் ஆண்டு பல வாழவே
ஆசி கூறி வாழ்த்துங்கள்

வருக ....

அறுகிலையும் கவிதை பாடும் அறிவுலகம் எக்ஸ்பிறஸ்
ஆசிரியர் மாணவரும் ஆளணியும் அற்புதம்
இன்னுமா சொல்லவா எண்ண எண்ணத் தித்திக்கும்
வந்து பார்த்தால் மெய்ப்பிக்கும்

வருக ....

கண்கலங்க வைத்த பகைவர் தோணி போகும் புயலிலே
காலை வாழ்த்துப் பாட வந்தீர் கருணையோடு சபையிலே
காற்றினாலும் மழையினாலும் கங்கையாறு கரையுமா?
நல்லவர் வாழ்த்துரை நாளும் நீங்கள் வாழ்த்தவே
ஆயுள் நூறு ஆண்டுகள்

வருக ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2005 மார்ச் 01இல் அகவை 50ஐ காணும் இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டின் அதிபர் உயர்திரு வரதராஜா அவர்களை பல்லாண்டு காலம் வாழ வாழ்த்தி வாஞ்சையுடன் வழங்கும் பொன்விழா நிறைநாள் வாழ்த்துக் கவி.

ஆக்கம்:- பண்டிதர் கு.துரைராஜன் (நிறுவன தமிழ் ஆசிரியர்)

**காப்பு**

அன்பால் அறுகால் தளிரால் மலரால்
அடியிணை பணிந்தேன் ஐங்கரன் காக்க

**ராகம்- சிந்துபைரவி** **தாளம்- ஆதி**

சேவை செய்யும் உள்ளம் என்றும் தெய்வம் வாழும் இன்ப வீடு சேர்ந்திருந்து
வாழ்த்துகிறோம் தேவலோகம் தானுமீடோ
இருபாலை எக்ஸ்பிறஸின் எமததிபர் வரதராஜா
அகவை ஐம்பதாண்டு இன்று ஆயுள் நூறுகோடி ஆண்டு
பாடு தென்னங்கீற்றே வாழ்த்துப் பாடு தென்னங்கிளியே வாழ்த்து

சேவை செய்யும் ....

மாடிமனை தொட்ட தென்றல் மண்குடிசை தொட்டுப் போகும்
மாணவர்க்கு கல்வி தந்தீர் மனசிலே சமத்துவமாய்
நினைவினிலே நிற்கும் கணிதம் நீரது மலரின் நீட்டம்
சாதனையாளன் சேவை வாழி நூறாண்டு காலம் வாழி நூறாண்டு காலம்

சேவை செய்யும் ....

தெள்ளு தமிழ் வள்ளுவனார் சொன்ன தமிழ் நீதி
தேன் தமிழும் சிவநெறி போல் வாழவேண்டும் நீல வானே
வம்ச விளக்கோடு நீங்கள் வாழி பல்லாண்டு

சேவை செய்யும் ...

நிலவுக்கு நிறமது போனது இல்லை
நெறிமுறை காப்பது நீதியின் பாதை
துணிவுக்குளாடும் துறவியின் மனசே
கணிதத்துறை தரும் வரதரின் சேவை
வைர மழைத்துளி போலவே வாழி
வாழ்க்கை விளக்கொடு வாழி நீர் நீடு

சேவை செய்யும் ...



**சுபம்**

"வித்ய சேவா சத்தியன் பூஜா"

The Express Institute
Irupalai, Kopay.

ஆசிரியர்களும்,மாணவர்களும்
ஆளணியினரும்
2005.03.01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



க.தேவராஜா
வணிகத்துறைத் தலைவர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை.

# மாணவர் நலன் நோக்கிய நல்லாசிரியர்

யாழ்ப்பாணத்தில் தனியார் கல்வியை வளர்ப்பதில் முண்ணணி வகித்த திரு.வரதராஜா அவர்களின் பொன்விழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் பெருமகிழ்வடைகின்றேன். இருபாலையில் எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் என்றாலே கட்டுப்பாட்டுக்கும்; கல்விக்கும் தனியிடம் வகிப்பதாகும். அங்கு கல்வி கற்கும் மாணவர்கள் மட்டுமன்றி ஆசிரியர்களும் தமக்கெனத் தனியான நடத்தையையும், ஆளுமையையும் கொண்டிருக்கின்றார்கள் எனக் கூறினால் அது மிகையாகாது. அக்கல்வி நிறுவனத்தின் தந்தை எனப் புகழப்படுபவர் இன்று பொன்விழாக் காணும் திரு.வரதராஜன் ஆவார்.

திரு.வரதராஜா அவர்கள் எனது குடும்ப நண்பர் மட்டுமன்றி எனது ஆசிரிய சேவையிலும் பங்கு கொண்டவர். அவர் தனியார் கல்வி நிலையங்களில் எப்படிக் கட்டுப்பாடு பேணப்பட வேண்டுமென விரும்பினாரோ அதேபோல் தனது கல்லூரி மாணவர்களுடனும் கட்டுப்பாட்டுடன் கல்வி பயில வேண்டுமென விரும்புபவர். இதன் காரணமாகத்தான் அவர் பணியாற்றும் யாழ் மத்திய கல்லூரியில் மாணவர் ஒழுக்கம் பேணுவதற்கு பொறுப்பாசிரியராக இருந்ததுடன் மாணவர் ஒழுக்கத்தைப் பேணுவதில் வெற்றியும் கண்டவர். மாணவர் நல்லொழுக்கமே கல்விக்கு அடிப்படை என்பதை நன்குணர்ந்து செயற்பட்டவர் எனக் கூறினால் அது மிகையாகாது.

மாணவர் நலனில் அக்கறை கொண்ட திரு.வரதராஜா என்றுமே சுறுசுறுப்பாக இயங்கும் தன்மை கொண்டவர். அவர் தனியார் கல்வி நிலையத்தினூடாகவும், யாழ் மத்திய கல்லூரியூடாகவும் மாணவர்களுக்கு சேவையாற்றுவது மட்டுமன்றி கோப்பாய் லயன்ஸ் கழகத்தினூடாக பொதுமக்களுக்கு சேவையாற்றும் பண்பாளனாக பணியாற்றி வருவதையும் கவனத்திலெடுத்தல் வேண்டும். எத்தகைய தீர்மானத்தை எடுப்பதிலும் அதனை நடைமுறைப்படுத்துவதிலும் அவருக்கென தனியான ஆளுமையும், ஆற்றலும் இருப்பதனை நாம் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். அவரது இக்கல்வியுலக சேவையானது எதிர்காலத்திலும் தொடர வேண்டுமென வாழ்த்துவதுடன் அவர் தனது மனைவியுடனும், மகளுடனும் மகிழ்வாக வாழ்ந்து மணிவிழா வைர விழா, நூற்றாண்டு விழா என்பவற்றினைக் காண வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டி எனது வாழ்த்தினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்

நன்றி

க.தேவராஜா
(ஒப்பம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வீ.சோமசுந்தரம்
ஓய்வு பெற்ற உபஅதிபர்,
இராஜவீதி, கோப்பாய்.

எனது மதிப்பிற்குரிய மாணவன் திரு.தம்பிப்பிள்ளை வரதராஜா தனது 50வது அகவையை சமீபத்தில் எய்த இருக்கின்றார் என்பதை அறிய நான் பெரிதும் பூரிப்படைகின்றேன். திரு.வரதராஜா அவர்களை நான் அவரின் சிறுபராயத்திலிருந்தே அறிவேன். நான் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் ஓர் ஆசிரியராகக் கடமையாற்றிய காலத்தில் இவர் அங்கு கல்வி கற்றுக் கொண்டிருந்தார். நான் அங்கு சாரணர்களுக்கு பொறுப்பான ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளேன். நான் சாரண கனிஷ்ட அணிக்கு (15 வயதுக்கு உட்பட்டவர்கள்) மாணவர்களைத் திரட்டும் பணியில் ஈடுபட்ட பொழுது எனக்கு முதலாவதாகப் பெயர் தந்தவர் திரு.வரதராஜா ஆவார். பின்பு அவரின் தனிப்பட்ட திறமைகளை நாம் நடத்திய சாரண பாசறைகளில் என்னால் அறிய முடிந்தது. சாரணியத்தில் இவர் காட்டிய ஊக்கமும், செயற்திறனையும் இச்சந்தர்ப்பத்தில் எடுத்துக் காட்ட விரும்புகின்றேன். ஒரு சாரணனுக்கு இருக்க வேண்டிய சகல தகுதிகளும் அதற்குரிய பண்புகளும் அவரிடம் உண்டு எனக் கூறினால் அது மிகையாகாது. தனது செயற் திறனாலும், ஊக்கத்தினாலும் ஓர் கனிஷ்ட சாரணன் பெறக் கூடிய மிக உயர்ந்த விருதான "Green Cord" இவர் பெற்றமை இதற்கு சான்று பகிர்கின்றது. இவர் இன்று ஓர் சிறந்த கணித ஆசானாக மட்டுமல்ல ஒரு சிறந்த ஒழுக்க நெறிகளை மாணவர்கள் மத்தியில் கடைப்பிடிக்கும் ஓர் ஆசானாகவும் விளங்குகின்றார். ஒழுக்க நெறிகள் மாணவர்கள் மத்தியில் அருகிக் கொண்டு வரும் இக்காலகட்டத்தில் திரு.வரதராஜாவின் சேவை பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். இவர் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ்ந்து மாணவர் சமூகத்திற்கு தனது தனியார் கல்வி நிறுவத்தினூடாக சேவை செய்ய வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்துக் கொண்டு இவ் ஆசிச் செய்தியினை நிறைவு செய்து கொள்கின்றேன்.



நன்றி

திரு.வீ.சோமசுந்தரம்
(ஒப்பம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Mrs.S.Chellaiah
Retd Teacher,
Christian College,
Kopay.

**FELICITATIONS TO Mr.VARATHARAJAH ON HIS 50[TH] BIRTHDAY.**

It is My PLEASURE TO EXPRESS MY APPRECIATION OF Mr.VARATHARAJAH CONTRIBUTION TO THE EDUCATIONAL WORLD. I HAVE KNOWN HIM AS A STUDENT AND WATCHED HIS PROGRESIVE CARRIER WITH MUCH INTEREST. AS HEAD OF THE EXPRESS INSTITUTE. HIS SELFLESS DEVOTION TO THE TEACHING PROFESSION HAS HELPED UNMEROUS STUDENTS TO PROGRESS IN THEIR STUDIES. MAY GOD BLESS HIS UNTIRING SERVICE TO THE PRESENT AND FUTURE STUDENTS.

BEST WISHESS AND ALL GODS BLESSINGS.

Mrs.s.Chellaiah (Sgd)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு.R.S.நடராஜா
பலாலி ஆசிரியர் கலாசாலை முன்னாள் அதிபர்
30,5/3 நெல்சன் பிளேஸ்,
கொழும்பு – 06

## வாழ்த்துக்குரிய வரதர்

கல்வி விருத்தியே வளமான வாழ்வுக்குரிய ஒரே வழி. அறிவுடையார் எல்லாம் உடையார். எனவே தான் திருவள்ளுவர் "கோடில் விழுச்செல்வம் கல்வி" என்றார். கல்வி வழங்குவோர் வணக்கத்துக்குரியவராக மதிக்கப்படுவர். ஒரு சமூக முன்னேற்றத்தில் ஆசிரியரின் பங்கும், பணியும் இன்றி அமையாதவை. இதனை ஆசிரியர் எவ்வழி சமூகம் அவ்வழி என்னும் பொன்மொழி புலப்படுத்தக் காண்கிறோம்.

தனது வாழ்வின் பொன்விழாவைக் கொண்டாடக் காணும் கல்வியாளர் திரு.தம்பிப்பிள்ளை வரதராஜா அவர்களின் ஆசிரிய வாழ்வின் வெள்ளி விழா இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே இடம்பெற்றது. கோப்பாய் இருபாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட வரதர் கல்வி விருத்தியையே தனது வாழ்க்கைப் பணியாகக் கொண்டவராவார். அவரது கல்விப் பணியை நயந்தவர்கள் அவரைப் பாராட்டப் பொன்விழா எடுப்பது மகிழ்ச்சியைத் தரும் நிகழ்ச்சியாகும்.

கணித விற்பன்னரான வரதர் மாணவரின் கல்வி விருத்தியை துரிதப்படுத்த இருபாலையில் எக்ஸ்பிரஸ் கல்வி நிலையத்தை 1973ஆம் ஆண்டில் நிறுவி அதன் மூலம் கல்வி வாய்ப்பினை வழங்கி வருகிறார். பிரதேச அர்ப்பணிப்போடு அவர் இயக்கி வரும் இக் கல்வி நிலையம் கோப்பாய்ப் பிரதேச மாணவர்களுக்கும் பெருங்கொடை என்றே கூறலாம். பாடசாலைக் கல்விக் குறை நிரப்பும் பணியினை ஆர்வத்தோடு மேற்கொண்டு வரும் பிரத்தியேகக் கல்வி நிலையங்கள் கல்விக் கட்டமைப்பில் இன்றியமையா அம்சமாயுள்ளன என்பதனை ஏற்று அவற்றை நன்கு பயன்படுத்திக் கொள்வது காலத்தின் தேவை பாதிப்புக்களுக்கு உள்ளான சமூகத்தின் எழுச்சிக்கு உதவும் குணசீலன்களின் பணியினைப் பாராட்டுவது நம் கடன்.

வரதர் பலாலி ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி பெற்ற காலம் தொடக்கம் (1982-1983) அவருக்கும் எனக்குமிடையே நெருங்கிய தொடர்பு நீடித்து வருகின்றது. வாழ்வித்து மகிழல் எம் இருவருக்குமிடையே பொதுப் பண்பெனலாம். பொன்விழாக் காணும் வரதர் வைர விழாக் காணும் வரையிலாவது தம் பணியினைத் தளராது தொடர வேண்டுகின்றேன்.

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு"

எனக் கூறி வரதரையும் விழா அமைப்பாளரையும் வாழ்த்தி மகிழ்கிறேன்.

நன்றி

R.S.நடராஜா
(ஒப்பம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி த.அரிராஜசிங்கம்
முன்னாள் கல்விப்பணிப்பாளர்,
கல்வி, கலாச்சார, விளையாட்டுத்துறை அமைச்சு,
வட கிழக்கு மாகாணம்.

# சிறந்த கணித ஆசிரியர்

இன்று 50வது அகவையில் கால் பதிக்கும் திரு தம்பிப்பிள்ளை வரதராஜாவினது பணிகளைப் பாராட்டி வெளிவரும் பொன்விழா மலருக்கு ஆசிச் செய்தியினை வழங்குவதில் அகமகிழ்வடைகிறேன்.

பலாலி ஆசிரிய கலாசாலையில் கணிதப் பிரிவு ஆசிரிய மாணவனாகப் பயின்ற காலத்தில் இவரது ஆற்றல்களையும் திறமைகளையும் என்னால் இனங்காணக் கூடியதாக இருந்தது. அவரது ஆற்றலை கற்பித்தற் பயிற்சியில் மிக உயர்ந்த பெறுபேறான "A" தரத்தைப் பெற்று சித்தியடைந்தமையை இங்கு குறிப்பிடலாம்.

இவர் தனது ஆசிரியப் பணியைத் தொடர்ந்த போது மிகச்சிறந்த கணித ஆசிரியராக விளங்கி வந்தமையை என்னால் அறிந்து கொள்ள முடிந்தது. அத்தோடு இருபாலையில் "எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்' எனும் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றை உருவாக்கி கற்பித்தலுடன் சிறந்த ஒழுக்கநெறிகளையும் மிகக்கட்டுப்பாட்டுடனும் முன் மாதிரியான நிறுவனமாக நிர்வகித்து வரும் அவரது ஆற்றலையும் ஆளுமையையும் விதந்து கூறாமல் இருக்க முடியாது.

இவர் தனது சேவையில் மேலும் சிறந்து சீரோடும் சிறப்போடும் பல்லாண்டு கால வாழ மனதார வாழ்த்துகின்றேன்.



நன்றி

க.அரிராஜசிங்கம்
(ஒப்பம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவஸ்ரீ பா.செல்வசேனக்குருக்கள்
பிரதம குரு.தென்கோவை,
கற்பகப்பிள்ளையார் தேவஸ்தானம்,
இருபாலை,
கோப்பாய்.

# ஆசிச் செய்தி

எமது இருபாலைக் கிராமத்தின் கடமை, கட்டுப்பாட்டுடன் மிகச் சிறப்பாக நடைபெறும் தனியார் கல்வி நிறுவனம் “எக்ஸ்பிறஸ்” இன்ஸ்ரிரியூட் இந்நிறுவனத்தின் ஸ்தாபகரும், அதிபருமாகிய திருவாளர்.தம்பிப்பிள்ளை வரதராஜா அவர்களுக்கு ஐம்பதாவது ஆண்டு அகவை விழா கொண்டாடுவதையிட்டு நாம் மிக்க மகிழ்ச்சியடைகின்றோம். திருவாளர். த.வரதராஜா அவர்கள் ஓர் சிறந்த கணித ஆசானும் சிறந்த நிர்வாக கட்டமைப்பாளரும், எமது கற்பகப்பிள்ளையார் மீது அயராத நம்பிக்கை உடையவரும், சமய, சமூக நிகழ்வுகளில் தன்னை முழு மனதுடன் ஈடுபடுத்துபவரும் ஆவார்.

எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் 1973ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை தன்னிகரில்லாமல் விளங்குவதற்கு அத்திவாரமாக இருப்பவர் இவ் ஆசான் ஆவார். தனது கல்வி நிறுவனத்தில் கலைமகள் சிலையை நிறுவி மாணவர்கள் தினமும் அதை வணங்கிய பின் பாடங்களைப் பயில வேண்டும் என்று ஓர் நல்ல சமய, சமூக ஒழுக்கத்தை எதிர்கால சந்ததியினருக்கு கல்வியோடு இணைத்துப் புகட்டி வருவது பாராட்டத்தக்க ஒரு அம்சமாகும். அத்தோடு எடுத்த காரியம் எதுவாக இருந்தாலும் துணிவுடனும், செயல்த் திறனுடனும் குறித்த நேரத்தில் நிறைவேற்றும் செயல் திறன் மிக்க ஓர் ஆசான் என்றால் அதை மறுக்க முடியாது.

இப்படிப்பட்ட இந்த கல்விமானும் சமய, சமூக வழிகாட்டியாய் விளங்குகின்ற திருவாளர்.த.வரதராஜா அவர்களுக்கு ஐம்பதாவது ஆண்டு அகவை விழா எடுக்கும் கல்விச் சமூகமும், மற்றையோரும் பாராட்டத்தக்கவர்கள். அதிபர் அவர்கள் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாக வாழ்ந்து எதிர் கால சந்ததியினரை நல்ல முறையில் வழி நடாத்த எல்லாம் வல்ல கற்பக விநாயகரின் திருவருள் என்றும் கிடைக்கும் என நல்லாசி கூறி வாழ்த்துவதில் நாமும் மன நிறைவடைகின்றோம்.



நன்றி

சிவஸ்ரீ பா.செல்வசேனக்குருக்கள்
(ஒப்பம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்
நல்லூர், யாழ்ப்பாணம்,
இலங்கை.

# அருள் ஆசிச் செய்தி

அன்புள்ளவர்களிற்கு:- திரு.வரதராஜா அவர்களின் 50வது பிறந்த தினத்தை இட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். தனியார் கல்வி நிலையத்தினூடாக நீண்ட காலமாகக் கல்விப் பணியாற்றிய பெருமைக்குரியவர். தனது ஐம்பதாண்டு கால வாழ்க்கைக் காலத்தில் இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாகக் குருப்பணி ஆற்றி வருவது பாராட்டுவதற் குரியதாகும்.

எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் எனும் கல்வி நிறுவனத்தின் மூலமாக ஆயிரக்கணக்கான மாணவர்களை நல்வழிப்படுத்திய அவர்களின் கற்றல் செயற்பாட்டின் வளர்ச்சிக்கு உதவியதன் மூலம் பலரதும் வரவேற்பையும், மதிப்பினையும் பெற்றவர் திரு.த.வரதராஜா ஆவார்.

இன்று பொன்விழாக் காண்கின்ற திரு.த.வரதராஜா அவர்கள் சிறப்புற்று நலமோடு வாழவும் தொடர்ந்தும் கல்விப் பணியினை சிறப்புறச் செய்யவும் இறைவன் ஆசிர்வதிக்கப் பிரார்த்திக்கின்றோம்.



நன்றி

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"
ஸ்ரீலஸ்ரீ.சோமசுந்தரதேசிய ஞானசம்பந்த
பரமாசார்யஸ் சுவாமிகள்
(ஒப்பம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FR.A.F.Celestine Mascaringhe omi
Parish priest
Kopay Thirunelvely parish
Adiapatham road , Thirunel vely
Jaffna, Srilanka

"வாழ்வென்னும் அருங்கொடைக்காக இறைவனைப் போற்றுவோம்" இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் அதிபரும் பிரபல கணித ஆசானுமாகிய திரு.த.வரதராஜா அவர்களின் 50வது அகவையில் அவரை வாழ்த்துவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

மானிட உருவாக்கத்தில் கல்வியும் ஒழுக்கமும் முதன்மை பெறுகின்றன. இவற்றை மாணவ சமூகத்திடையே நடைமுறைப்படுத்த அரும்பணி புரிகின்றார். எழுத்தறிவித்தவன் இறைவனாவான். திரு.த.வரதராஜா அவர்கள் வெறுமனே கல்வி அறிவை மட்டுமல்ல ஒழுக்கமுள்ள கல்வியைக் கொடுப்பதில் முனைந்து நிற்கின்றார். மாணவ சமூகம் கல்வியையும் ஒழுக்கத்தையும் தமது இரு கண்களாக மதித்து வாழ வழிகாட்டுகின்றார்.

இப்பணி தொடரவும், அதன் வழி மேன்மை அடையவும், சகல நலன்களும் பெற்று மகிழ்வுடன் வாழவும் இறையருள் வேண்டுகின்றேன்.



நன்றி

FR.A.F.Celestine Mascaringhe Omi (sgd)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு.கோ.சி.வேலாயுதம்
முன்னாள் கல்விப் பணிப்பாளர்
190, முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

# மின்னும் மாணவ மணிகளை ஆக்கும் நிறுவன அதிபர் பொன்விழாச் செம்மல் வரதராஜா

வாழ்வியல் வனப்படைய வேண்டுமானால் வையகம் பயனுற வாழவேண்டும். அரிது என்ற வார்த்தையை உள்வாங்கிய ஔவைப் பிராட்டி மானிடராதல் அரிது" என்றார்.

"நல்லதோர் வீணை செய்தே நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ.
சொல்லடி சிவசக்தி என்னைச்சுடர்மிகும் அறிவுடன்
படைத்துவிட்டாய். வல்லமை தாராயோ இந்த வையகம்
பயனுற வாழ்வதற்கே" என்பது பாரதியின் இதயநாதம்.

இந்தவகையில் பல்கிப் பெருகி எம்மண்ணில் அறிவுப்பசி போக்கிய கல்வி நிலையங்களில் "ஒழுக்கமும் கட்டுப்பாடும் - அயராத உழைப்பும் மாணவனின் உயர்ச்சிக்கு இன்றியமையாதவை. என்பதை நிலைநிறுத்த பல தசாப்தங்களாக உழைத்த நிறுவனங்களில் இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் முன்னணி வகிக்கின்றது.

பெற்றோரும் மற்றோரும் போற்றப் பணிசெய்த நிறுவனம், அது பாடசாலை விழுமியங்களைப் பேணிக்காத்த வெற்றியும் அதற்கு உண்டு. திண்ணிய நெஞ்சத்தோடு எண்ணிய முடிக்கும் நிறுவன இயக்குனர் வரதராஜா பொன்விழாக்காணும் நிலை கண்டு மகிழ்கின்றோம். சிறந்த கணித ஆசிரியராகப் பணியாற்றி வரும் வரதராஜா மாணவர்களின் நலன்கருதி கணித நூல் ஒன்றினை வெளியிட்டும் இருக்கின்றார். சிறந்த அடைவு மட்டத்தை மாணவர்கள் பெற, ஆற்றல் வாய்ந்த ஆசிரியர் குழாத்துடன், அடித்து அணைக்கிற நீர்மையராய் சேவை புரிந்து வருகிறார்.

புற நகர்ப்புறத்தே புதுப்பொலிவோடு விளங்கிய விளங்கும் எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் நவீன தேவைகளையும் உள்ளடக்கி மாணவர்களை வளர்த்தெடுக்க, சிறந்த கல்வியூட்டத்தைக் கொடுக்க, அயராது உழைப்பவர் பொன்விழா நாயகன்.

"ஊழையும் உப்பக்கங்காண்பார் உலைவின்றி
தாழாது உஞற்றுபவர்"

என்ற வள்ளுவன் வாய்மொழிக்கு அமைய உயர்ந்து செல்லும் எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்

"நெல்லுமுயிரன்றே நீருமுயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்"

என்ற பழந்தமிழ் பாடலை நினைவுபடுத்தி நிறுவன இயக்குனரின் ஆளுமைத்திறனை, முயற்சிப்பெருக்கை நாமெல்லாம் நயந்து போற்ற வைக்கின்றது, நிறுவனத்தின் உயிர்த் துடிப்பான உழைப்பு.

பொன்விழாச் சிறக்க எம் வாழ்த்துக்கள்

நன்றி

திரு.கோ.சி.வேலாயுதம்
(ஒப்பம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ.ஶ்ரீஸ்கந்தமூர்த்தி
அதிபர்
கோப்பாய் ஆசிரிய கலாசாலை

கடந்த முப்பது ஆண்டுகளாக யாழ்ப்பாணத்து மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக அர்ப்பணிப்பான பணியினை இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் ஆற்றிவருவது யாவருமறிந்ததேயாகும். அந் நிறுவனத்தின் வளர்ச்சியோடு தன்னை இணைத்துக் கொண்டவர்தான் கணிதப் பேராசான் உயர்திரு.வரதராஜா அவர்கள் பாடசாலை ஆசிரியராக, தனியார் கல்வி நிறுவன இயக்குநராக, சமூகத் தொடர்பாளராகப் பன்முக ஆளுமை மிக்கவர் அவர் மாணவர்களின் நல்லொழுக்கத்திலும் கட்டுப்பாட்டுடனான கல்வி பெறுதலிலும் அக்கறை காட்டி உழைத்து வருபவர். அவர் ஐம்பதாவது அகவையில் அடியெடுத்து வைப்பதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். திருவரதராஜா அவர்கள் நீண்டகாலம் சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.



நன்றி

ஆ.ஶ்ரீஸ்கந்தமூர்த்தி (ஒப்பம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இ.மருதலிங்கம்
விரிவுரையாளர்
ஆசிரிய பயிற்சி கலாசாலைகோப்பாய்

# பன்முக ஆளுமை கொண்ட முகாமையாளர்

ஒருவரது வயது அவரது ஆற்றல்களது வெளிப்பாடன்று அவ்வயதினுள் அவர் ஆற்றிய சேவைகள் படைத்த சாதனைகள் என்பனவே அவரை இனங்காட்டிப் பிறரைச் சிந்திக்க வைக்கிறது. அந்த வகையில் இன்று 50வது அகவையை அடையும் திரு.த.வரதராஜா ஒரு சேவையாளர், சாதனையாளர் எனக் கூறமுடியும். தனது மிகச்சிறுவயதிலேயே இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் எனும் தனியார் கல்வி நிறுவனத்தை ஆரம்பித்து 30 வருடங்களுக்கு மேலாக இப்பகுதி பிள்ளைகளுக்கும் அயற்கிராமப் பிள்ளைகளுக்கும் தரமான கல்வியை வழங்கி வருகிறார். மாணவர்களுக்கு ஓர் வைர ஏணியாக பெற்றோர்களது நம்பிக்கை நட்சத்திரமாக இந்நிறுவனம் தொடர்ந்து இயங்கி வருவதற்கு இவரது பன்முக ஆளுமை கொண்ட முகாமைத்துவமே காரணம் ஆகும். “தூயவை துணிந்த போது பழிவந்து தொடர்வதில்லை” என்பதுபோல பலவித சவால்களுக்கு முகம்கொடுத்து எதிர்நீச்சல்போட்டு தனிஒரு மனிதராக பலரது ஒத்துழைப்போடு இப்பணியை ஆற்றி வருகிறார். வேறெதையும் விடப் பிள்ளைகளுக்கு ஒழுக்கத்தோடு கூடிய முழுமையான கல்வியை வழங்க வேண்டுமென்பதற்காக கணனிக்கல்வி கலைவிழாக்கள் விளையாட்டுச்செயற்பாடுகள் மற்றும் வகுப்பறை வசதிகள் என இன்னோரன்ன அம்சங்களோடு தனித்துவமான நிறுவனமாக விளங்குகிறது.

திரு.வரதராஜா மிகச்சிறந்த கணித ஆசிரியர் தனியான வேறுபாடுகளுக்கமைய கணிதத்தை மாணவர் விரும்புமாறு கற்ப்பிப்பதில் துறைபோனவர் கண்டிப்பு, கட்டுப்பாடு, ஒழுக்கம், என்பன மாணவர்களது எதிர்கால முன்னேற்றத்தை குறியாகக் கொண்டமைந்ததால் உள்நாட்டில் மட்டுமன்றி உலகின் பலபாகங்களிலும் உள்ள இந்நிறுவன மாணவர்கள் அதன் பயனை நன்றியோடு நினைவு கூருகிறார்கள். இத்தகைய நல்லாசான், சாதனையாளர், சமூகப்பயன்பாட்டாளர் தனது பணியினைத் தொடர்வதற்கு ஏற்ற வல்லமையினையும் வளங்களையும் வழங்கிட எல்லாம் வல்ல எம்பெருமானது பாதம் பணிந்து பணிமேலும் சிறக்க வாழ்த்துகிறேன்



நன்றி

அன்புடன்
இ.மருதலிங்கம்
(ஒப்பம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ்.முத்துக்குமாரசாமி
கிராமசேவையாளர்
கல்வியங்காடு J/259
யாழ்ப்பாணம்

நோக்கம் புனிதத்தன்மை இழந்தால் நடைமுறைகள் வளர்ச்சியை மழுங்கடிக்கும் என்ற உயர்ந்த கொள்கையை இலக்காகக் கொண்டு யாழ்/ இருபாலையை கடந்த 32 வருடங்களாக தனது தன் நிகரற்ற சேவை மூலம் அழகுறச் செய்யும், எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் அதிபரும் பிரபல கணித ஆசானுமாகிய திரு. த.வரதராஜாவை அவர்களின் 50வது பிறந்த தினத்தன்று வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்'

ஒரு தனியார் கல்வி நிறுவனம் தனது ஒப்பற்ற சேவை மூலம் உயர்ந்து நிற்கிறதென்றால் அந்தப் பெயரும் புகழும் அதை நிர்வகிப்பவரின் ஆளுமையையே சாரும் அந்த வகையில் "கடமை, கண்ணியம், கட்டுப்பாடு" ஆகிய உயரிய நற்பண்புகளைத் தன்னகத்தே கொண்டு வாழும் எக்ஸ்பிறஸ் வரதன் என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் திரு.வரதராஜா அவர்கள் அகவை 50இல் காலடி

எடுத்து வைக்கும் நிகழ்வை அவரைக் கௌரவித்து வாழ்த்தும் நிகழ்வாகக் கொண்டாட எண்ணிய நிறுவன சமூகத்தின் முடிவு மிகவும் வரவேற்கத்தக்கதும் போற்றப்படவும் வேண்டிய விடயமாகும்

அவரின் இப்பணி மேலும் சிறக்கவும் இந்நிறுவனம் மூலம் கல்விச் செல்வத்தை அள்ளி வழங்கிய அவர் வாழ்வு எல்லாச் செல்வமும் பெற்று சிறப்பாக அமையவும் என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.



நன்றி

திரு.எஸ் முத்துக்குமாரசாமி
(ஒப்பம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இ.இராசதுரை
செயலாளர்
வலி கிழக்கு பிரதேச சபை
நீர்வேலி

இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் வலி கிழக்கு மாணவ மணிகளுக்குக் கிடைக்கப்பெற்ற ஓர் அரும் பெரும் கல்விப் பொக்கிசமாகும். இதன்மூலம் கடந்த மூன்று தசாப்த காலத்திற்கும் மேலாகக் கல்விச் செல்வத்தைப் பெற்று ஒளிவீசிக் கொண்டிருக்கும் கல்விமான்களை உருவாக்கிய பெருமைக்குரியவர் இதன் அதிபரும், பிரபல கணித ஆசானுமாகிய திரு.த.வரதராஜா அவர்களேயாவார்.

இவரது 50 ஆவது பிறந்த தினத்தை இவரின் பொன்விழாக்குழுவினர் பொறுப்பெடுத்து நடாத்துவது பெருமைக்குரிய ஒரு விடயமாகும். பிரதேசசபையின் சார்பில் அவரை வாழ்த்திக் கௌரவிக்கும் பாக்கியம் கிடைத்ததில் மகிழ்ச்சியடைகின்றேன்.

முகாமைத்துவம் மிக்க அதிபர் மேலும் பல்லாண்டு காலம் வலிகிழக்கு மாணவ மணிகளுக்கு அழியாச் செல்வத்தை வழங்கி இன்புற்று வாழ எல்லாம் வல்ல இருபாலை கற்பக விநாயகரை இறைஞ்சுகின்றேன்.



நன்றி

இ.இராசதுரை
(ஒப்பம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Dr.A.Ganeshamoorthy
Reristered Medical officer
(Regd.no.1271)
Irupalai

மாணவரின் முகவரியாகவும் மக்களின் கதைவரியாகவும் எனது நண்பனாகவும் வாழும் எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் இயக்குனர் திரு.வரதராஜாவின் 50வது பிறந்தநாளை முன்னிட்டு மனதார வாழ்த்துகின்றேன்.

கல்விக்கே தன்னை அர்ப்பணித்து மகத்தான பணிசெய்யும் பெரியாரின் சீரிய தொண்டுகள் நமக்கெல்லாம் நல்லதொரு வழிகாட்டி

பழகுவதற்கு இனியவராகவும் உள்ளதை உள்ளபடி பேசும் இயல்பினராகவும் புன்முறுவல்பூத்த முகத்தினராகவும் நேர்மையானவராகவும் செயற்திறன் மிக்கவராகவும் சிறந்த நிர்வாகியாகவும் ஒழுக்க சீலராகவும் நற்குணம் நற்பண்பும்உடைய தம்பி வரதர் இப்பாரினிலே சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்க வாழ்க வென வாழ்த்துகிறேன்

நன்றி

அ. கணேசமூர்த்தி
(ஒப்பம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வைத்திய கலாநிதி லயன் வை.தியாகராஜா
தலைவர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ் மாவட்ட இணைப்பாளர்
சர்வதேச லயன்ஸ் கழகம்

இருபாலை கோப்பாயில் இயங்கி வரும் எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டின் அதிபர் திரு.த.வரதராஜா அவர்கள் பொன்விழாக் காண்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். ஆரம்ப காலத்தில் தெள்ளிய ஆலின் பழத்தொரு விதையாக" விளங்கிய இக்கல்வி நிறுவனம் இன்று 32 ஆண்டுகளைக் கடந்து சிறப்புற இயங்கி கல்வி வளர்ச்சிக்கு பெரும்பங்காற்றி வருகின்றது. இதற்கு காரணகர்த்தா திரு.த.வரதராஜா அவர்களே.

இன்று பாடசாலைகள் கல்விச் செயற்பாட்டில் ஆசிரியர் பற்றாக்குறை, பரந்த பாடவிதானம், குறித்த காலப் பகுதியில் பாடவிதானத்தை கற்று முடிக்காமை, பொதுப்பரீட்சைகள் என்று பல இன்னல்களை எதிர்நோக்குகின்றன. இப்பிரச்சனைகளைத் தீர்ப்பதில் முன்னின்று உழைக்கும் நிறுவனம் எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் என்றால் அது மிகையாகாது. அதற்கு அந்நிறுவன அதிபரின் அயராத முயற்சியும் கல்விசார் செயற்பாடுகளில் கொண்டுள்ள மிகுந்த அக்கறையும், சிறந்த ஆளுமையுமே காரணம் என்பது யாவரும் அறிந்த விடயம்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றைத் தன்னுடைய தாரக மந்திரமாகக் கொண்டவர் திரு.த.வரதராஜா ஆவார். இவர் கல்விப் பணியில் மட்டுமல்லாது சமூப்பணியிலும் தன்னை அர்ப்பணித்தவர் என்பது தனிப்பட்ட முறையில் எனக்கு நன்றாகத் தெரியும்.

மேலும் கோப்பாய் லயன்ஸ் கழகத்தினூடான கல்விச் செயற்றாடுகளில் 2000ம் ஆண்டு டிசம்பர் க.பொ.த (சா/த) மாணவர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்கினை அதன் இணைப்பாளராக இருந்து செயற்படுத்தியதுடன் மட்டுமல்லாது கணித பாட விரிவுரையாளராகவும் செயற்பட்டு யாழ் மாவட்டமாணவர்களுக்கு பெரும்பயனை ஈட்டிக் கொடுத்தடன் எமது கோப்பாய் லயன்ஸ் கழகத்திற்க்கும் பெருமை தேடித்தந்த பெரும்புகளுக்குரியவர் திரு.வரதராஜா ஆவார் அத்தன்மை வாய்ந்த அவருக்கு இன்று எத்தனையோ சோதனைகள், வேதனைகள் இவற்றையெல்லாம் தகர்த்து எறிந்து சிகரத்தின் வளர்ச்சிக்கு சென்று யாவரையும் பிரமிக்க வைக்கின்ற அவரது கல்விச் செயற்ப்பாடுகளையும் புகழ்கிறேன் போற்றுகின்றேன் எத்தனை இடர்கள் வரினும் இவர் தான் கொண்ட கொள்கையிலிருந்து சிறிதும் மாறாது சேவையாற்ற வேண்டுமென பொன் விழா காணும் இப் பொன் நாளில் நன்நாளில் சிறப்புற அமைய வாழ்த்துகின்றேன்

"தொடரட்டும் நும்பணி தொடரட்டும் நும்புகழ்"



நன்றி

வை.தியாகராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் விடுக்கும் வாழ்த்துச் செய்தி

பொன் விழாக்காணும் புகழ் பூத்த ஆசிரியர், நிர்வாகி எக்ஸ்பிரஸ் கல்வி நிலையத்தின் அதிபர் திரு.வரதராஜா.

பருத்தித்துறை வீதியில் இருபாலை கற்பக விநாயகர் ஆலயத்திற்கு அருகில் மிகச் சிறந்த கல்வி நிலையமாக எக்ஸ்பிரஸ் கல்வி நிலையத்தை முப்பது வருடங்களிற்கு மேலாக வழி நடாத்தி வரும் பெருமை திரு.வரதராஜா அவர்களையே சாரும். இக்கல்வி நிலையத்தின் ஆரம்ப காலத்தில் 1973, 1974ஆம் ஆண்டில் கணித ஆசிரியராக இங்கு கடமையாற்றினேன். பின்பு 1988ஆம் ஆண்டில் க.பொ.த (உயர்தரம்) வகுப்பிற்கு இந்துநாகரிகம் கற்பித்தேன். கட்டப்பிராயிலும் கல்வியங்காட்டிலும் வசித்த காலத்தில் எனது புத்திரர்கள் இங்கே கல்வி பயின்றார்கள். திரு.வரதராஜா அவர்களை எனக்கு கால் நூற்றாண்டுக்கு மேலாகத் தெரியும்.

நாங்கள் மாணவர்களாக இருந்த காலத்தில் பாடசாலைகள் மிகுந்த கட்டுப்பாட்டுடன் செயற்பட்டன. ஆசிரியர்கள் மாணவர்களின் நலனில் மிகவும் அக்கறையுடன் செயற்பட்டார்கள். மாணவர்கள் பாடசாலைக்குப் புறம்பாக, பிரத்தியேக கல்வியைப் பெற வேண்டிய தேவை பெரும்பாலும் ஏற்படவில்லை. காலத்தின் கோலத்தினால் பாடசாலைகளின் செயற்பாட்டில் வீழ்ச்சி ஏற்பட ஆரம்பித்தது. கடமை உணர்வுடன் பாடசாலையைக் கோயிலாக மதித்துத் தனது பணியினைத் தெய்வீகப் பணியாகச் செய்யும் ஆசிரியர்களின் எண்ணிக்கையும் வீழ்ச்சி அடையத் தொடங்கியது.

பாடசாலைகளில் ஏற்பட்ட இத்தகைய குறைகளை நிவர்த்தி பண்ணக் கூடிய இடங்களாக கல்வி நிலையங்கள் தோற்றம் பெற்றன. இவ்வாறு தோற்றம் பெற்ற கல்வி நிலையங்களில் முதன்மை பெறுவது எக்ஸ்பிரஸ் கல்வி நிலையம் ஆகும்.

கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக பல சோதனைகளையும் வேதனைகளையும் சந்தித்தும் மனம் தளராது தனது கல்வி நிலையத்தை இவர் சிறப்பாகச் செயற்படுத்தி வருகின்றார். மிக இறுக்கமான கட்டுப்பாட்டுடன் கல்வி நிலையத்தை நடாத்துகின்றார். பல மாணவர்களை நல்வழிப்படுத்திய பெருமை இவரையே சாரும்.

பொன்விழாக் காணும் திரு.வரதராஜா தனது பணியைச் சிறப்பாகத் தொடர்ந்து செய்வதற்குரிய உடல், உள ஆரோக்கியத்தினை எல்லாம் வல்ல பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமான் அவருக்கு வழங்க வேண்டுமென்று இறையருளைப் பிரார்த்திக்கின்றேன்.



நன்றி

சிவ மகாலிங்கம்
(ஒப்பம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டின் கணனிப் பிரிவு அப்போதய யாழ் பல்கலைக்கழக துணைவேந்தரால் 2000 ஆம் ஆண்டில் ஆரம்பித்து வைக்கப்பட்ட வேளை.






1998 இல் நடைபெற்ற கல்வி நிறுவன வெள்ளி விழாவின் போது விருந்தினர்களை அழைத்து வருகையில்

1998 இல் நடைபெற்ற கல்வி நிறுவன வெள்ளி விழாவில் பிரதம விருந்தினர் தம்பதியினருடன் மங்கள விளக்கேற்றலின் போது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆறு.திருமுருகன்
பிரதி அதிபர்
ஸ்கந்தவரோதயா கல்லூரி
சுன்னாகம்.

இருபாலை எக்ஸ்பிரஸ் இன்ஸ்ரிரியூட் அதிபர் திரு.த.வரதராஜா அவர்களின் கல்விப்பணியை வாழ்த்தி விழா எடுப்பது அறிந்து ஆசி வழங்குவதில் மகிழ்வடைகிறேன் பலவருடங்களாக பலஆயிரம் மாணவர்கள் பயன்பெற வழிகாட்டிய ஆசிரியரை அவரிடம் பயன்பெற்ற மாணவர்கள் வாழ்த்துவது நன்றிக்குரியதாகும். கல்விப்பணி கடவுள்பணி தமிழர்களின் பெரும் சொத்து கல்வி கல்விக்காக உழைத்தவர்களை கௌரவிப்பது புதிய தலைமுறையை ஊக்குவிப்பதாக அமையும் எல்லாம் வல்ல இறைவனின் நல்லாசிகளோடு ஆசிரியர் பல்லாண்டு பணிசெய்ய வாழ்த்தி அமைகிறேன்



நன்றி

ஆறு.திருமுருகன்
ஒப்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரா. செல்வவடிவேல்
142/1 மானிப்பாய் வீதி
யாழ்ப்பாணம்.

# ஆசிச் செய்தி

ஆண்டொன்று போனால் வயதொன்று போகும் அனைவருக்கும் வயது போகிறது. சிலருக்குத்தான் வயது. அனுபவ முதிர்ச்சியைத் தருகிறது. திரு.த.வரதராஜா "அகவை ஐம்பது" அடைவது அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். ஐம்பதாண்டு வாழ்க்கை அனுபவத்தின் சுரங்கமாகும்.

எனக்கு திரு.த.வரதராஜாவை தனியார் கல்வித்துறை அறிமுகம் செய்து வைத்தது. ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் அவருடன் பழகி வருகிறேன். சிறிது காலம் அவரது கல்வி நிறுவனத்தில் ஆசிரியர் பணி செய்திருக்கிறேன். சிறந்த நிர்வாகத்திறமை அவரிடம் நான் கண்ட சிறப்பாகும்

மாணவர்களின் ஒவ்வொரு விடயத்திலும் கூடிய அக்கறை காட்டுவது அவரது சுபாவம் மாணவர்கள் இன்று மாணவர்களாக இல்லை.

அவர்களுக்கு வழிகாட்ட முற்படுபவர்கள் அனுபவிக்கும் துன்பம் மிகவும் வேதனைக்குரியது. அப்படிப்பட்ட "துன்பியல்" நிகழ்வுகள் ஏற்பட்டபொழுதும் துணிவுடன் செயற்பட்டவர் வரதன்!

திரு.த.வரதராஜா தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்தின் யாழ் மாவட்டத் தலைவராக இருந்து செயற்பட்டிருக்கிறார். இத்துறையின் முன்னோடியாகத் திகழ்ந்த "Bond ஆனந்தகுமார்" அவர்களுக்கு எக்ஸ்பிறஸ் கல்வி நிறுவனத்தில் நினைவு விழா நடத்தப்பட்ட நிகழ்வு பசுமையாக இருக்கிறது.

ஒரு சிலருக்கே தூங்காமை, துணிவுடமை, கல்வி இம்மூன்றும் வாய்க்கப்பெறும். அந்த சிலரில் வரதனும் ஒருவராவார்.

கடந்த காலத்தை மறந்துவிடு! எதிர்காலக் கனவுகளால் நிகழ் காலத்தை அழித்துவிடாதே! என்பது தான் நம் பெரியவர்களின் வாக்காகும். இதனை நினைவில் கொண்டு செயற்பட்டு சிறப்படைய வாழ்த்துகிறேன்.

வாழ்க! நீ! பல்லாண்டு!



நன்றி

இரா. செல்வவடிவேல்
(ஒப்பம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



த.இராசரத்தினம்
தலைவர்
கோப்பாய் தெற்கு
கற்பக விநாயகர் ஆலய
திருப்பணிச்சபை

## ஆசியுரை

எல்லாத் தானங்களிலும் கல்வித்தானம் மிகச்சிறப்புடையது அத்தகைய கல்வித்தானத்தின் மூலம் ஆயிரமாயிரம் மாணவச் செல்வங்களுக்குப் பல ஆண்டுகளாக அறிவுப் பசியைத் தீர்த்து வருவது இருபாலை எக்ஸ் பிரஸ் கல்வி நிறுவனமாகும். இக்கல்வி நிறுவனம் எமது இருபாலை கற்பக விநாயகராலயத்தின் வடபாலமைந்து, கற்பகவிநாயகரின் அருட் பார்வையோடு கற்பகத்தருவென விளங்குகின்றது. இங்கே நுண்மான் நுழைபுலம் மிக்க பல்வகைச்சிறப்புக் கல்வித் தகைமைகளைக் கொண்ட நல்லாசான்கள் கடமையாற்றி வருவது போற்றுதற்குரியது அத்தகைய ஆசான்களுக்கெல்லாம் ஆசானாக, ஆளுமைமிக்க அதிபராக இருந்து முப்பது ஆண்டுகளுக்கு மேலாக மாணவர்களின் விழுமியங்களை மேற்கொணரும் பொருட்டு வழிநடாத்திய பெருமைக்குரிய வர்தான் எமது அன்புக்கும் மதிப்புக்குமுரிய உயர்.திரு.வரதராஜன் அவர்கள்.

கணித பாடத்தை வேம்பென நினைத்து கசந்து பின்வாங்கிய மாணவர்களுக்கு அது தேனென இன்சுவை யூட்டி ஆர்வத்தைப் பெருக்கித் திறமைச் சித்தியடையச் செய்த பெருமை திருவாளர் வரதராஜன் அவர்களையே சாரும்

அன்பும் அடக்கமும் அகிம்சையும் நேர்மையும் செயல்திறனும் கொண்ட அன்னாருக்கு இன்று ஐம்பது அகவை பூர்த்தியாகிறது பொன்விழாக்காணும் விழா நாயகருக்கு மேற்படி கல்வி நிறுவனச் சமூகம் பெருவிழாக் கொண்டாடுவது சாலச்சிறந்ததே இந்த வகையில் பொன்விழா நாயகர் மட்டுமல்ல விழாச்சபை மட்டுமல்ல, கல்வி நிறுவனத்தோடு தொடர்புடைய அனைவரும் பெருமைக்கு ரியவர்களே என்பதை மட்டற்ற மகிழ்ச்சியுடன் கூறிக் கொள்கிறேன்.

திரு.வரதராஜன் அவர்கள் சமய சமூக இசைவாக்கமுடையவர் கற்றோரும் மற்றோரும் மதித்து நடக்கும் வகையில் அன்புடனும் பண்புடனும் பழகும் சுபாவமுடையவர் அதே நேரத்தில் மாணவர்களின் முன்னேற்றத்துக்காக அவர்களுடன் மிகப் கண்டிப்பாக நடந்து கொள்பவருமாவர் இறைபக்தியும் கருணையுள்ளமும் கொண்ட அன்னார் எமது கற்பக விநாயகராலய மஹோற்சவத்தில் ஆறாவது திருவிழாவையும் புரட்டாதி மாத நவாராத்திரி பூசையில் எட்டாவது பூசையையும் திறம்படச் செய்வித்து விநாயப்பெருமானின் பேரருளைப் பெற்றுக் கொள்பவர் பொன்விழாக்காணும் பெருமைக்குரிய அன்னார் இன்னும் பல்லாண்டு காலம் நோய்நொடியின்றி இப்பூவுலகில் வாழ்ந்து, அறப்பணி பல புரிந்து, புகழுடைய வேண்டுமென எமது திருப்பணிச் சபையின் சார்பிலும் அடியார்கள் சார்பிலும் மகிழ்ச்சியையும் போற்றுதலையும் கூறி, எல்லாம் வல்ல கற்பக விநாயப்பெருமானின் அருள்வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி

த.இராசரத்தினம்
(ஒப்பம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



த. முத்துக்குமாரசாமி
அதிபர்
கொழும்பு இந்துக்கல்லூரி
கொழும்பு - 04

ஒருவரின் வாழ்க்கையில் 50 ஆண்டுகள் என்பது அரைநூற்றாண்டில் அவரின் சாதனைகளை எடுத்துக் காட்டுகின்றது. கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் மாணவனாக நான் இருந்த காலத்திலிருந்து எனது இளையவராக கல்விகற்ற காலத்திலிருந்து இன்றுவரை வரதனின் 40வருடவாழ்க்கையை நான் நன்கு அறிந்தவன் என்ற வகையில் வரதனின் சில குணாதிசயங்களைக் கூறுவதில் மகிழ்ச்சியடைகிறேன் மாணவப்பருவத்தில் நாம் மாணவர் தலைவர்களாக இருந்தபோது இடைவேளை நேரங்களில் இவரது வகுப்புக்கு மேற்பார்வைக்குச் செல்லும்போது வகுப்பில் அமைதியாகப் பொறுமையோடு தனது பாடங்களைப் படிக்கும் தன்மையையும் சகமாணவருடன் பழகும்போது மரியாதையுடன் பண்பாகப் பழகும் தன்மையையும், கண்டுள்ளேன். அத்துடன் மூத்தோரை மதிக்கும் பண்பு, அவர்களுடன் மரியாதையாகப் பழகும் தன்மையால், ஆசிரியர்களுடன் கூட ஒரு மதிப்பைப் பெற்ற மாணவனாகத்திகழ்ந்துள்ளார்.

ஆசிரியப்பணிப் பொறுப்பை ஏற்றதும் சிறந்த ஒரு ஆசிரியனாக மாணவர் நிலையறிந்து கற்பிக்கும் ஒரு ஆசிரியனாக, மாணவரால் மதிக்கப்படும், போற்றப்படும் ஒரு ஆசிரியனாக மாணவர் மனதில் வரதன் சேர் என்றால் ஒரு மரியாதை கலந்த அன்பிருக்கும் நிலையை கண்டுள்ளேன். தொடர்ந்து நான் கிறிஸ்தவ கல்லூரியின் அதிபராக இருந்தபோது வரதன் வாதரவத்தை மகாவித்தியாலய ஆசிரியராகவும் அதே நேரம் இருபாலை எக்ஸ்பிரஸ் கல்வி நிறுவனத்தின் இயக்குனராகவும் கடமையாற்றியுள்ளார். தனது கல்விநிறுவன செயற்பாடாக இவரது பாடசாலைக் கற்பித்தல் நிகழ்வுகள் எந்த வகையிலும் இடையூறின்றி நல்ல முறையில் நடைபெற்றுள்ளதையும் கண்டுள்ளேன். அதுமட்டுமல்ல பாடசாலை கற்பித்தல் நிகழ்வுடன் மட்டுமல்லாது மாணவர்களின் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் மாணவர்களைப் பயிற்றுவித்த தன்மையையும் போட்டி நிகழ்ச்சிகளுக்கு மாணவர்களை வெளியிடங்களுக்கு அழைத்துச் சென்று ஊக்குவித்ததையும் அந்த நேரங்களில் அச்செயற்பாடுகளுக்கு தனது சொந்தப் பணத்தையே செலவீடு செய்த தன்மைகளையும் பாடசாலையில் பாடசாலையின் நிர்வாகத்திற்குப் பல வழிகளிலும் உதவியதையும் பாடசாலை நிர்வாக வெளிவேலைகள் பலவற்றைப் தனது சொந்த வேலைகள் போல் செய்வதையும் கண்டுள்ளேன்.

தனது கல்வி நிறுவன இயக்குனர் வாழ்வினில் கூட மிகவும் கண்டிப்பான ஒரு நிர்வாகியாகவும், ஆசிரியனாகவும் அன்பு நிறைந்த ஒரு தோழனாகவும் இருந்துள்ளார். மாணவரது ஒழுங்கு, ஒழுக்கம், கல்வி முன்னேற்றத்தில்இருபாலை எக்ஸ்பிரஸ் நிறுவனம் யாழ் நகரில் ஒரு சிறந்த நிர்வாகக் கட்டமைப்புள்ள நிறுவனமாகத் திகழ்ந்து வந்துள்ளது கல்வி நிறுவனத்தினுள் மட்டுமல்ல வெளியிலும் மாணவர்கள் வீதியில் போகும் போதும் வரும்போதும் கூட ஒருவர்பின் ஒருவராக மாணவர்கள் செல்வதையும். நுழைவாயிலில் நின்று ஆசிரியர்கள் மாணவர்களை ஒழுங்காகவீடு செல்ல வழியனுப்பி வைப்பதையும், எந்தவொரு காலத்திலும் ஆசிரியர் வரவில்லையே என்று மாணவர்கள் வீடு திரும்பிச் செல்லாது அதற்கு மாற்றுகல்வி ஒழுங்குகளைக் கையாண்டு மாணவர்களுக்குச் சிறந்த கல்வி போதித்தமையையும் கண்டுள்ளேன் தனியார்கல்வி நிறுவனமாக இருந்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுப்போட்டி, பரிசளிப்புவிழா, கலைவிழா, ஆகிய நிகழ்வுகளை வைத்து மாணவரை ஊக்குவிக்கும்தன்மை அவர்களது வெளியாற்றல்களை வெளிக்கொணரும் தன்மையினால் பெற்றோர்கள் கூட இவரது நிறுவனத்தில் மிகவும் ஈடுபாடுடன் இருந்த நிலையையும் கண்டுள்ளேன்.

தான் கல்விகற்ற பாடசாலைக்கு மட்டுமல்ல ஏனைய அயலிலுள்ள பாடசாலைகளிற்கூட காலத்திற்குக் காலம் பல உதவிகள் செய்கின்ற நல்ல பண்பு நிறைய வரதனிடம் இருந்துள்ளது தனது குடும்பத்தின்உயர்வுக்குக் கூடபெருந்தொண்டாற்றிய பங்கு வரதனுக்கு உண்டு.

இத்தகைய பல நல்ல அம்சங்களைக் கொண்ட வரதன் தனது வாழ்வில் அரை நூற்றாண்டை நிறைவு செய்வதையிட்டும் அவனது அரை நூற்றாண்டு காலத்தில் அவன் செய்த பணிகளால் மாணவ சமுதாயம், பெற்றோர் அவனைப் போற்றும் அளவுக்கு அவன் உயர்ந்துள்ளான். இவையெல்லாம் வரதனின் சேவைக்கு கிடைத்த பரிசென்றே கருதுகின்றேன்.

வரதனின் கல்வி, சமூகப்பணி, தொடரவும் இன்னும் பல நூற்றாண்டுகள் தனது குடும்பத்தவர், சுற்றத்தவர், நண்பர்களுடன் இன்புற்று வாழவும் எல்லாம் வல்ல இறைவனருளால் வாழ்த்தி அமைகின்றேன்.



நன்றி

த.முத்துக்குமாரசாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கே.வி.குணசேகரம்
அதிபர்
யாழ் கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
கோப்பாய்

# வாழ்த்துரை

இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் அதிபரும் பிரபல கணித ஆசானுமாகிய திரு.த.வரதராஜா அவர்களின் பொன்விழா மிகவும் சிறப்புற நடைபெற வாழ்த்துகிறேன் பொன்விழா நாயகரின் கடந்த காலச்சேவை மிகமிச் சிறப்பானது அச்சிறப்பான சேவை இன்னும் பல்லாண்டு காலம் நீடித்து மாணவர்கள் பெரும் பயன்பெற வேண்டும் இதற்கு இருபாலையில் அவரது நிறுவனத்திற்கு முன் கோயில் கொண்டிருக்கும் கற்பக விநாயகரின் அருள் வேண்டிப் பிரார்த்திப்பதோடு அவரது சேவை தொடர வாழ்த்துகிறேன்

நன்றி

வி.குணசேகரம்
(ஒப்பம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிடம் மலர்ந்தது மாணவம்
உயர்ந்தது தேசம் சிரித்தது தேவை உன்
சேவை என்றும்

# லக்கி
## பான்சி ஹவுஸ்



இருபாலைச்சந்தி, கோப்பாய்.

முத்தமிழாய் சொற்திறனாய்
வாழியவே நீகுளி

# தனம்
## மல்ரி பலஸ்



இருபாலைச்சந்தி. கோப்பாய்.

நிழலை மிதித்தால் நிஜத்திற்கு கேடா
தீயை மிதித்து சிரிப்பவர் உண்டா
அறிவை ஆளும் திறனே வாழி

# துளசி
## வர்த்தக நிலையம்

இருபாலைச்சந்தி, கோப்பாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✍ இதய கீதம் எழுதும் கவிதை இனிமை சிறக்க
இதயங்கள் வாழ்த்தும்

# கங்கை ஓ(f)வ் செற்

# பிறின்டேர்ஸ்



கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

✍ இருசுடர் தொட்டு இன்னும் எழுக

# சுவஸ்திகை

## ரெக்ஸ்



இருபாலைச்சந்தி, கோப்பாய்.

✍ பகை வென்ற மாமல்லன்
திறன் போல வாழி

# யசோ

## மரக்காலை



இருபாலைச்சந்தி,, கோப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தி.சாம்ஸன் லூர்திஸ்
அதிபர்
நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர்
பாடசாலை
தைதடி

50வது இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் அதிபர் திரு.த.வரதராஜா அவர்களின் 50வது பிறந்த தினத்தை முன்னிட்டு வெளியிடப்படும் இவ்வாழ்த்து மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு யான் பேருவகையடைகிறேன். உண்மையில் இவ்வாறான ஒரு விழாவை திரு.த.வரதராஜா அவர்களுக்கு நிகழ்த்துவது மிகவும் பொருத்தமானதாகும். ஏனெனில் ஆசிரியர்கள் உருவாக்கப்படுவதில்லை ஆசிரியர்கள் பிறக்கிறார்கள் ஆசிரியர்கள் ஞானவிளக்குகள் என்கின்ற வகையில் இருபாலை வாழ் மக்களுக்கு "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்பதற்கு இணங்க என்னைப் போதித்ததன் மூலம் ஒளியைக் கொடுக்கவும் கண்ணாகவும் அப்பிரதேச மக்களின் அறியாமையைப் போக்கி அறிவு என்னும் ஒளியை வழங்கிய ஞான விளக்காகவும் கடந்த 32 வருடங்களாக அளப்பரிய சேவையை கல்வி உலகிற்கு வழங்கிய ஒருவர் நிச்சயமாக வாழ்த்தப்பட வேண்டியவரே அவர் மேலும் இம்மக்களுக்குச் சேவையாற்ற கடவுள் அவருக்கு எல்லா ஆசிகளையும் வழங்குமாறு பிரார்த்தித்து அவரை வாழ்த்துகிறேன்



நன்றி

T.சாம்ஸன் லூர்திஸ்
(ஒப்பம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ந. சிவகடாட்சம்
அதிபர்
யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

# வாழ்த்துச் செய்தி

எமது பிரதேசத்தில் கடந்த இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக ஒரு தனியார் கல்வி நிறுவனத்தை சிறந்த முறையில் இயக்கி வருபவர் திரு.த.வரதராஜா ஆவார்.

இவரின் விடாமுயற்சி, கணிதத்தைக் கற்பிக்கும் திறமை இவரை எமது பிரதேச கணித ஆசிரியர்களில் ஒருவராக திகழ வைத்ததில் சந்தேகம் இல்லை.

யாழ் மாவட்ட கல்வி வளர்ச்சியில் தனியார் கல்வி நிறுவனங்களின் பங்களிப்பு கடந்த காலங்களில் பெறுமதிமிக்கதாக இருந்தது. யுத்த சூழ்நிலையால் அரச பாடசாலைகள் ஒழுங்காக செயற்படாத வேளைகளில் மாணவர்கள் இழந்த கல்வியை மீட்டெடுக்க தனியார் கல்வி நிறுவனங்கள் வழங்கிய சேவை பெறுமதிமிக்கது

தனது ஐம்பதாவது வயதை நிறைவு செய்யும் திரு.த.வரதராஜா தொடர்ந்தும் தனது பணிகளை செவ்வனே செய்து நீண்ட காலம் வாழ எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்



நன்றி

ந.சிவகடாட்சம்
ஒப்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ.அகிலதாஸ்
அதிபர்
யா/கோப்பாய் மகா வித்தியாலயம்
கோப்பாய்

இருபாலை எக்ஸ்பிறஸ் நிறுவனத்தின் முதல்வரும் அனுபவம்மிக்க கணித ஆசான் திரு.த.வரதராஜா அவர்களின் ஐம்பதாவது அகவையை விழாக்குழுவினர் கொண்டாடும் இவ்வேளையில் வாழ்த்துச்செய்தி அனுப்புவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

இவர் அனுபவமும், அறிவும், ஆற்றலும் மிக்கவர். கடமை கண்ணியம் கட்டுப்பாடு மிக்க செயல் வீரன் சிறந்த நிர்வாகி சிறப்பான முகாமையாளர் நேர முகாமைத்துவத்தைக் கண்டிப்பாக கடைப்பிடிப்பவர் வினைத்திறன் மிக்க ஆசிரியவளத்தைக் கொண்ட பயனுறுதி வாய்ந்த வினைத்திறன் மிக்க கல்வி நிறுவனத்தின் உரிமையாளர் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு முன்மாதிரி பெற்றோர்கள் மாணவச்செல்வங்கள் மத்தியில் நம்பிக்கையூட்டும் நிறுவனம் எமது பள்ளியின் மதிய உணவுத்திட்டத்திற்கு உதவும் கரங்களில் ஒருவர் அப்படிப்பட்ட பெருமகனின் துணிச்சல் மிக்க சேவை மேலோங்க நீண்ட ஆயுளுடன் வாழ என் வாழ்த்துக்கள்



நன்றி

அ.அகிலதாஸ்
ஒப்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோர் ஒருவரின் வாழ்துச்செய்தி

இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டின் அதிபரின் பொன்விழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். பழைய மாணவி என்ற வகையில் பெற்றோர் என்ற வகையிலும் நானும் எமது அதிபரை பல்லாண்டுகாலம் வாழ்க என வாழ்த்துவதில் உவகையடைகின்றேன்.

தனியாரால் உருவாக்கப்பட்டு வெற்றிகரமாக எமது மண்ணில் பல இடர்களின் மத்தியிலும் கட்டுக்கோப்புடன் இயங்கி வந்து தற்போது தனது சேவையில் 32 வருடங்களை எமது நிறுவனம் வெற்றிகரமாக, பூர்த்தி செய்தமைக்கு மிகமுக்கியமான காரணம் எமது அதிபரேயாவார். அவருடைய தன்னம்பிக்கையும் மாணவர்களை நல்வழிப்படுத்த வேண்டும் என்ற பேரவாவுமே இதற்கு காரணமாகும்.

எமது அதிபர் இக்கட்டான சூழ்நிலைகளிலும் மனம் தளராது, மாணவர்களுக்கு மிகவும் கண்டிப்புடன் பாடங்களை மட்டும் கற்றுக் கொடுக்காது, மற்றைய துறைகளிலும் அவர்களின் திறமையை உயர்த்த வேண்டும் என்ற நோக்கமுடையவராக இருப்பதுடன் தனது விடாமுயற்சியின் காரணமாக, திறமையான முன்னணி ஆசிரியர்களின் உதவியோடு இம்மண்ணிற்கு பல துறைகளிலும் முன்னணியில் திகழும் வாரிசுகளை உருவாக்கித் தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இவ்விழாவினை ஒழுங்குசெய்யும் எமது அதிபரிடம் கல்விபயின்ற மாணவர்களையும், பயின்றுவரும் மாணவர்களையும் வாழ்த்துவதோடு எமது அதிபர் தனது சேவையை இனிவரும் காலங்களிலும் குறைவின்றி தொடர இறைவனை வேண்டுகின்றேன்.



நன்றி

திருமதி ஜெயகௌரி இராஜேந்திரன்
பழைய மாணவியும் (1982 O/L)
தற்போதைய பெற்றோரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோ.சுந்தரமூர்த்தி
ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்
உள்ளூராட்சி திணைக்களம்
கோண்டாவில் வீதி
இருபாலை

காலங்கள் மாறலாம் கருத்துக்கள மாறலாம் எண்ணங்கள் மாறலாம் ஆனால் ஒருவரது நல்ல சேவை என்றும் மாறாதவை மாற்ற முடியாதவை அழிக்க முடியாதவை நித்தமும் நிலையாக சிலையாக நிற்பவை அந்த வகையில் பார்க்கும் போது எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் நிறுவனத்தின் கல்விச்சேவை அளப்பரியது பல்லாயிரக்கணக்கான மாணவர்களை வைத்தியராகப் பொறியியலாளராக இன்னும் பலதரப்பட்ட உயர் பதவிகளுக்கு உயர்த்திய பெருமை அந்த நிறுவனத்திற்குண்டு.

இத்தகைய உயர்வுக்கு அச்சாணியாக இருக்கின்ற அதிபர் உயர்.திரு.த வரதராஜாவையே அந்தப் பெருமை சாரும் சமூக உயர்வுக்கு உழைக்கும் எவரையும் சமூகம் மகிமைப்படுத்த வேண்டியது சமூகத்தின் கடமைகளில் ஒன்று அந்தவகையில் (28-4-1990)ல் நிறுவனத்தின் செயற்பாட்டைப்பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக கல்வியன்காடு ஞானபாஸ்கரோதய சங்கம் வாழ்த்துப்பாவை வழங்கிக் கௌரவித்தமையும் இங்கு குறிப்பிடுவதில் பெருமையடைகிறேன.

திறமைமிக்க ஆசிரியர்களை ஒருங்கிணைத்து வெள்ளிவிழா ஆண்டையும் கடந்து இந்நிறுவனம் இன்றும் கொடிகட்டிப் பறக்கின்றது என்றால் அதற்கு காரணம் என்ன? பின்னணி என்ன? அதை உங்கள் மனச்சாட்சி எடைபோடட்டும் .

குடாநாட்டின் நாலூர்களிலுமிருந்து இங்கு மாணவர்கள் கல்விகற்க வருகின்றார்கள் அது ஏன்? அதுதான் ஒழுக்கத்தோடு கூடிய எக்ஸ்பிறஸ் நிறுவனத்தின் கல்விச்சேவை எனது பிள்ளைகளும் இந்நிறுவனத்தின் பழையமாணவர்கள் குறிப்பாக எனது மகன் சு.அனோஜன் இன்று மொறட்டுவப்பல்கலைக்கழகத்தின்மூன்றாம் வருட மாணவனாக இருப்பதையும் இவருடன் பயின்ற பல மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் படிப்பதையும் நான் அறிவேன் இவை எல்லாம் இந்த நிறுவனத்தின் அருட்கொடைகள் ஒழுக்கத்தினூடு கல்வி சமயத்தினூடு கல்வி, கலாரசனையூடு கல்வி என்ற ஒருங்கிசைவோடு இந்நிறுவனசேவை தொடர்கிறது இருபாலை கற்பக விநாயகர் ஆலயத்தில் வருடந்தோறும் நடைபெறும் மகோற்சவத்தில் ஒரு திருவிழாவையும் ஏற்று நடாத்தி வருவது யாவரும் அறிந்ததே: அந்த வகையில் இன்று பொன்விழாக்காணும் நிறுவன அதிபர் திரு.த.வரதராஜா எல்லா நலன்களும் பெற்று நீடூழி வாழ எல்லாம் வல்ல கற்பக விநாயகரை வேண்டுகின்றேன்




சோ.சுந்தரமூர்த்தி
ஒப்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



க.சிவபாலசிங்கம்
40/2 கலைமகள் வீதி
அரியாலை
யாழ்ப்பாணம்

# ஆசியுரை

அறிவொளி வீசி அகலிருள் நீக்கும் அளப்பெரிய பணியினை மேற்கொள்ளுகின்ற கல்வி நிறுவனங்களுள் இருபாலையில்அமைந்துள்ள எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டும் ஒன்றாகும். இந்நிறுவனத்தை கடமை, கட்டுப்பாடு, கண்ணியம் நிறைந்த முறையில் நடாத்துகின்ற பெருமைக்குரியவராகஇந்நிறுவனத்தின் அதிபர் உயர்திரு தம்பிப்பிள்ளை வரதராஜா அவர்கள் விளங்குகின்றார். யாழ் மண்ணின் கல்வி முன்னேற்றத்திற்காக உழைக்கின்ற கல்வி மான்களில் ஒருவராக திரு வரதன் ஆசிரியர் அவர்களும் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது சிறந்ததொரு கணித ஆசானாக இன்றைக்கு முப்பத்திரண்டு வருடங் களாக சிறந்த முறையில் இவர் பணியாற்றுகின்றமை பாராட்டத்தக்க தொன்றாகும் நற்பண்பும் சிறந்த கடமையுணர்வும் கொண்ட திரு வரதன் ஆசிரியரின் நெறிப்படுத்தலின் கீழ் பல மாணவர்கள் கல்வி கற்று இன்று சமூகத்தில் உயர்ந்த ஸ்தானத்தில் மிளிர்வதனை நாம் காணக்கூடியதாய் இருக்கின்றது.

காலத்தால் அழியாத கல்விச்செல்வத்தை எமது மாணவர்கள் பயன் பெறுகின்ற வகையில் சிறந்த முறையில் கற்பிக்கின்ற நல்லாசான் திரு வரதன் ஆசிரியருடைய பொன்விழாவிற்கு பெற்றோர் என்ற வகையில் ஆசியுரை வழங்குவதில் நான் பெருமகிழ் வடைகிறேன் திரு.வரதன் ஆசிரியரின் வழி காட்டலின் கீழ் எனது மகன் செல்வன் சி.ஜெயகாந் அவர்கள் கல்வி பயின்று இன்று மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீட மாணவனாக திகழ்வதனை இந்த சந்தர்ப்பத்தில் நினைவு படுத்துவதுடன் எமது மாணவர்களின் எதிர்கால சுபீட்சத்திற்கான இவருடைய பணி மேலும்பல ஆண்டுகள் தொடர வேண்டும் என இறையாசியை வேண்டி எனது நல்லாசிகளையும தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நன்றி

க.சிவபாலசிங்கம் ஒப்பம்
(பெற்றோர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



க. பார்த்தீபன் பழைய மாணவன்
இல. 69 G.P.S றோட்
கல்வியங்காடு
யாழ்ப்பாணம்
09.02.2005

நெற்கதிர்களின் மென்மையான காற்று வருடிச் செல்கின்ற அந்த அமைதியான கிராமம் தான் இருபாலை. அந்த இனிய கிராமத்தில் கல்விப் பயிர் வளர்த்த கண்ணியமான மனிதர் வேறுயாருமல்ல அவர்தான் மாணவ உலகிற்கு வைரஏணி தந்த எமது ஆசிரியப் பெருந்தகை திரு.வரதராஜா (வரதன் மாஸ்ரர்) அவர்கள். அவர்தம் முயற்சியில் அமைத்த இல்லம்தான் நாம் எல்லோரும் கல்விகற்கின்ற "எக்ஸ்பிறஸ்" என்ற புனித கல்விக்கூடமாகும்.

கல்வி வளர்ச்சிக்காக அவர் எவ்வளவு கடினமாக உழைத்தாரோ அதே போல் ஒழுக்கம் கட்டுப்பாடு என்பவற்றையும் உறுதியுடன் பின்பற்றி வந்துள்ளார் அவர் மாணவர்களை கண்டிப்பாக பார்க்கின்ற பார்வை ஒழுக்கம் கட்டுப்பாட்டைத் தெளிவாகக் காட்டி நிற்கும். நன்றாகச் சிரித்துச் சிரித்துப் பேசக்கூடிய அவர், கடமை நேரங்களில் ஓர் கடமை வீரனைப்போல் செயற்படுகின்ற விதம் அவருக்கேஉரிய தனிச்சிறப்பை எல்லாம் நான் மாணவனாக இருந்த காலத்தில் கணித பாடத்தை இலகுவில் விளக்கப்படுத்துகின்ற முறையும் என்னைக் கவர்ந்ததே எனலாம்.

மாணவ உலகிற்கு ஓர் மகத்தான வரப்பிரசாதம் "எக்ஸ்பிறஸ்" கல்விக்கூடம் மட்டுமல்ல. அதன் அதிபர் வரதன் மாஸ்ரரும் தான் என்றால் அது மிகையாகாது. கடமை நேரம் தவிர்ந்த நேரங்களில் இனிமையாகப் பேசக்கூடிய அவர் கல்வி வளர்ச்சியில் சிரத்தை உள்ள சிறந்த சிந்தனையாளர் என்பதை அவரின் கடந்தகால பெறுமதி மிக்க சேவைகள் சான்று பகர்கின்றன. அவர் மாணவ சமூகத்திற்கு ஆற்றிய அளப்பெரிய சேவை மென்மேலும் பல்லாண்டுகளுக்கு தொடர வேண்டும் என்று வாழ்த்துவதோடு அல்லாமல் அவர்தம் பழைய மாணவராகவும், பெற்றோராகவும் இருப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். அவர்தம் சேவையில் பல செயல் வீரர்களை உருவாக்கியுள்ளார். அவரின் வரலாறும் சாதனைகளும் பல்லாண்டுகளுக்கு வாழவும் நீளவும் வாழ்த்துகின்றோம். எமக்கெவருக்கும் தெரியாமல் இரண்டு கரங்கள் அவரை ஆசீர்வதித்த வண்ணமுள்ளன. அது தான் ஆண்டவனின் கரங்களால் அவருக்கு கிடைத்த ஆசிகள்.



நன்றி

பழைய மாணவன்
க.பார்த்தீபன்
(ஒப்பம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி.தங்கவடிவேல்
சமாதான நீதிவான்
இருபாலை கிழக்கு
கோப்பாய

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு"


என்று வள்ளுவர் செப்பியதற்கிணங்க அன்பு எனும் கோலினை கையினுள் அடக்கிப் பிறர் பிள்ளைகளுக்கு தன் பிள்ளைகள் போல் கல்விப்பயிரை விதைத்து வரும் நல்ஆசான் கணிதக்கனி திரு.த.வரதராஜா அவர்களின் ஐம்பதாவது அகவை காணும் நாளை முன்னிட்டு வெளிவரும் மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றோம்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய நற்பண்புகளையுடைய ஆசிரியர்களை உயிராகக் கொண்டு யாழ்ப்பாணத்திலே முதல்தர புகழ்மிக்க எக்ஸ்பிறஸ் கல்வி நிறுவனத்தினை நல்நிர்வாகக் கட்டமைப்பினால் மூன்று தசாப்த காலத்திற்கு மேலாக மாணவர்கள் ஒளி வீசும் வண்ணம் நிர்வகித்து வரும் நிர்வாகி என்றால் அதற்கு நிகர் எவரும் இல்லை.

நிறுவன ஆரம்பம் முதல் இன்று வரை தன்னை நாடி வந்த மாணவச்செல்வங்களின் மனதில் பசுமரத்தாணி போல' கடின கணித பாடத்தினை மெல்லப் புகுத்தி வைத்தியர் பொறியிலாளர், கணக்காளர், ஆசிரியர்கள் என பல்வகைதுறை சார்ந்த எண்ணிலா மாணவ முத்துக்களை உருவாக்கி எதிர்கால சமுதாயத்திற்கும் ஓர் உந்து சக்தியாக திகழ்பவர் இவ் ஆசான்.

வாழ்க்கையே ஒவ்வொரு மனிதனுக்கும் போராட்டமாகத் தான் அமைகின்றது அந்த வகையில் சில தடங்கல்கள் ஏற்பட்ட போதும் சளைக்காது பிறர் பிள்ளைகளுக்கு என்பையும் ஈயும் வரை தொடரும் ஆசிரியப்பணி பாராட்டத்தக்கது.

ஆகவே தங்களுடைய அரிய போதனையை எனது பிள்ளைகள் செவிசாய்த்து தொடர்ந்து பேரப்பிள்ளைகள் தற்போது செவிமடுக்கின்றனர் அதே போல் பூட்டப்பிள்ளைகள் செவிகளும் கேட்க நீண்ட ஆயுளும் நிறைந்த சுகமும்பெற தென்கோவை கற்பக விநாயகப் பெருமான் அருள் வேண்டும் என ஆசி கூறி அமைகின்றேன்



நன்றி

சி.தங்கவடிவேல்
(ஒப்பம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரிய சேவையில் 25 வருடங்களைப் பூர்த்தி செய்ததன் முகமாக 2003 இல் யாழ் மத்திய கல்லூரி மாணவ முதல்வர்களால் வழங்கப் பட்ட கேடயத்தினை யாழ் கோட்டக் கல்விப்பணிப்பாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளும் போது






கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி நடாத்தப்பட்ட கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியின் போது பிரதம விருந்தினராக கலந்து உரையாற்றுகையில்

யாழ் மத்திய கல்லூரியில் நடைபெற்ற அனைத்துலக ஆசிரியர் தினத்தின் போது மாணவர்களினால் கௌரவித்து அழைத்து வரும் போது கல்லூரி ஆசிரியர் குழாத்துடன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி. ந.கனகம்மா
கனகா புத்தகசாலை
திருநெல்வேலிச்சந்தி
யாழ்ப்பாணம்

பொன்மாலை சூடும் எமது அன்பிற்குரிய ஆசானே திரு.த.வரதராஜா அவர்களே!எம் கல்வி! எம் சமூகம்! எம்பணி எல்லாம்எமது உயிருடன் கலந்தவை புனிதங்கொண்ட நல் விழுமிய கல்வியூடே அறிவை வளர்த்த ஆசிரியரே வித்திட்டு உரமும் இட்டு நன்னெறி சென்றிட வழிகாட்டும் ஆசானே நீவீர் நீடுழி வாழி எக்ஸ்பிறஸ் வளர்த்து விட்ட சிட்டுக்களாய் இன்று என் பிள்ளைகள் உங்கள் 50வது பொன்விழாதனிலே வளமாக வாழவாழ்த்துகிறேன் தடைகள் தாண்டி உங்கள் இலட்சியப் பயணம் தொடரட்டும் அதற்கேற்ப வழியில் அனைவரையும் வளர்க்கும் ஆசானே உம்பணி தொடரட்டும் வாழ்க! வளமுடன் இப் பொன்விழா நாளிலே பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றேன்



நன்றி

நன்றி

ந.கனகம்மா (ஒப்பம்)
பெற்றோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இ.தவக்குமார்
இருபாலை வீதி
பழனியாண்டவர் கோயிலடி
கோண்டாவில்

# என் ஆசித் துளிகள்

எமது ஆசான் திரு.த.வரதராஜா அவர்களின் பொன்விழாவை நினைத்து மனதார வாழ்த்துகின்றேன். "அன்னையாயினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" என்பதற்கிணங்க ஆசானின் பெருநோக்கு கற்றல் கற்பித்தலில் ஒரு நோக்கமாக கொண்டது இந்நிலையில் இவர் இருபாலையில் "எக்ஸ்பிறஸ்" கல்வி நிலையத்தை ஆரம்பித்து எண்ணற்றமாணவ மணிகளைத் தனது கணிதத்துறை வாயிலாக உயர்வகுப்புகளிற்குகொண்டு சென்ற பெருமை யாராலும் மறுக்கவோ மறக்கவோ முடியாது காலத்தின்கதவைக் கண்ணாகக் கொண்டு கல்வியினை பொன்னாக மதித்து மாணவர்களிடையே போதித்ததன் பெருமையினால் இன்று அவருக்கு பொன்விழா எடுப்பதில் மாணவ உலகமே பெருமைப்படுகிறது எனது பிள்ளைகள் இங்கே கல்வி பயில்கின்றமையால் இவரைப்பற்றிஅனைத்தும் நான் அறிவேன் இந்த வகையில் இவர் யாழ் மத்திய கல்லூரியின் கணிதத்துறை ஆசிரியராகவும் பணிபுரிபவர் ஆற்றலும் அனுபவமும் வாய்ந்த தன்மையினாலே இவரால் இயக்கி நடாத்தப்படும் எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் என்றும் புகழோங்க வாழ்த்துகின்றேன். ஆசானின் புனிதப்பணியானது எதிர்காலத்திலும் மலர்ந்தோங்க இறைவனிடத்தில் வேண்டுகின்றேன்.யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்ற நோக்கில் ஆசிரியர் பெருந்தகைக்குளடுக்கும் பொன்விழாக் கோலத்தில் அவரது அகவை பல்லாண்டு காலம் "அறுகுபோல் படர" இறைவனை வேண்டி எனது நெஞ்சார்ந்த ஆசிமூலம் வாழ்த்துகின்றேன்.

நன்றி

இ.தவக்குமார் ஒப்பம்
(பெற்றோர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



க.ஞானசேகரம்
"தர்சினி வாசம்"
பிராமனோடை
கோப்பாய் வடக்கு, கோப்பாய்
09.02.2005

**"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்"**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு"**

இவ்விதம் போற்றப்படுகின்ற கல்வியின் மேம்பாட்டிற்கு வழிகாட்டியாகத் திகழ்வதோடன்றி அச்சேவையின் தனித்துவத்தில் மேன்மையுற்று விளங்குகின்ற கல்வி நிறுவனமாக "எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்" காணப்படுகின்றது இந்நிறுவனத்தை நிறுவிய பெருமை அதன் அதிபராகவும், யா/ மத்திய கல்லூரியின் கணித ஆசானாகவும் மாணவர் ஒழுக்க மேம்பாட்டு ஆசிரியராகவும் திகழுகின்ற ஆசிரியர் திரு.த.வரதராஜாவையே சாரும்.

இவ் ஆசிரியர் பெரிதும் போற்றப்படத்தக்கவர். எத்தனையோ நல்லொழுக்கம் மிக்க மாணவர்களையும், கணித திறமை மிக்க மாணவர்களையும் உருவாக்கியுள்ளார். இவரிடம் கல்வி கற்ற மாணவர்கள் பலர் உயர் பதவிகளில் இருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

ஏன்? எனது பிள்ளைகள் கூட எக்ஸ்பிறஸ் கல்வி நிறுவனத்தில் ஆசிரியர் திரு.த.வரதராஜாவிடமே கல்வி கற்றவர்கள். எனது பிள்ளைகளான சுயாதரன், கருணாதரன், சுயதர்சினி ஆகியோர் இந்நிறுவனத்தின் பழைய மாணவர்களாக் காணப்பட சுஜீதரன் தற்போது தரம் 10ல் இங்கு கல்வி கற்றுக் கொண்டிருக்கின்றார்.

சுயாதரன், கருணாதரன், சுயதர்சினி ஆகியோர் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ள நிலையில் சுயாதரன் தற்போது கனாடவில் கணனிப் பொறியியலாளரிற்கு (Computer Engineer) படித்துக் கொண்டிருக்கின்றார் கருணாதரன் தற்போது ஹற்றன் நஷனல் வங்கியின் காப்புறுதி நிறுவனத்தில்(H.N.B. Assurance) காப்புறுதி முகவராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார். சுயதர்சினிக.பொ.த.(உ/த)இல் கலைப்பிரிவில் (2005)கல்வி கற்றுக் கொண்டிருக்கின்றார்.

இவ் ஆசிரியரிடம் கல்விகற்ற கற்கின்ற மாணவர்கள் யாவரும் இவரது கட்டுப்பாட்டின் கீழ் கீழ்ப்படிந்து வளர்ந்தவர்கள். இதனால் இவர்கள் தாங்கள் சென்றுள்ள இடங்களில் சிறப்பு பெற்றுள்ளார்கள். என்று கூறினால் அது மிகையாகாது.

இத்தகைய பல சிறப்புக்களையுடைய ஆசான் அவர்கள் தனது 50ஆவது அகவையில் தடம் பதித்துள்ள இவ்வேளையில் பல சிறப்புக்களைப் பெற்று பல்லாண்டு வாழ்கவென மனதாரவாழ்த்துவதுடன் அவர் தம் கல்விச்சேவை தொடரவும் வாழ்த்துகிறோம்



நன்றி

திரு.க.ஞானசேகரம்
ஒப்பம்)
பெற்றோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2004 க.பொ.த [சா/த] மாணவர் தம் மன ஊற்றில் – அதிபர்

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்னும் பொய்யாமொழிப் புலவனின் வாக்கிற்கிணங்க கற்றதன் வழி ஒழுகும் எங்கள் அதிபர் இன்று பொன்விழாக் காண்கின்றார். தன் மாணவர்களின் உயர்ச்சியையே அவர் தம் குறிக்கோளாக கொண்டு தன்னைப் பற்றி எள்ளளவும் சிந்திக்காத மனப்பாங்கு கொண்டவர் எங்கள் அதிபர்.


கண்டிப்பும், தியாக சிந்தையும் நிரம்பிய எம் அதிபர் தன் ஒவ்வொரு மூச்சும் தன் மாணவர்களின் வளர்ச்சிக்கே உதவ வேண்டும் என்பதில் மிகவும் அக்கறையுடையவர். மாணவர்கள் கல்வியில் மட்டும் வளர்ந்தால் போதாது. அவர்கள் உலக வாழ்க்கை பற்றியும் அறிய வேண்டும் என்பதில் மிகவும் அக்கறையானவர். பொறுமை, நிதானம், விடாமுயற்சி என்பவையே நாம் கண்ட அவரின் ஏணிப்படிகள் ஒவ்வொரு மாணவனையும் தன் வசப்படுத்தி அவனுக்கு ஏற்ற வகையில் கல்வி புகட்டுவதில் வல்லமையுடன் விளங்கும் எம் அதிபர். எமக்கு கணித ஆசிரியராகவும் கிடைத்தமை நாம் முன்பு செய்த புண்ணியமே! என்றால் அதில் தவறேதுமில்லை.

இவை தவிர நேரம் தவறாமை, பிறருக்கு இன்னா செய்யாமை என்பன அவர் தம் ஒழுங்கு. இன்னல்கள் பல வந்தாலும் தன் முயற்சியை சிறிதும் கைவிடாது இன்று பொன்விழா காணுகிறார்.எம் அதிபர்.

நாம் கல்வி கற்ற காலத்தில் பற்பல இடையூறுகள் ஏற்பட்ட போதும் அவற்றுக்கெல்லாம் முகம் கொடுத்து இன்றும் வாடாமல்லிகையாக மணம் வீசும் எம் ஆசான். இன்று மட்டுமல்ல என்றுமே எம் மனதில் குடி கொண்டவர். தன்னிடம் கல்வி பயில வரும் எந்த மாணவனும் ஏதாவது ஒரு நன்மை தரும் புதுவிடயத்தை அறிந்தே செல்ல வேண்டும் என்பதில் மிகவும் அக்கறையுடைய எம் ஆசான். அதற்கு ஏற்றாற் போலவே எல்லா வசதிகளுடனும் தான் கற்பிக்கும் பணி தன்னை தன் சக ஆசிரியர் குழாமுடன் தொடர்ந்து வருகின்றார். இவ்வாறு சீரும் சிறப்பும் பெற்ற எம் ஆசான்:- ஆம் இன்று பொன் விழா காண்கின்றார்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

எனும் வள்ளுவன் வாக்கிற்கிணங்க எம் அதிபர் நமக்குக் கற்பித்த கல்வியை என்றும் மறவாத நாம் அவர் எல்லா நலத்துடனும் பல ஆண்டுகள் வாழ்ந்து பணிபுரிய எல்லாம் வல்ல சரஸ்வதி தேவியின் பாதார விந்தங்களில் வேண்டி நிற்கின்றோம்.



நன்றி

க.பொ.த (சா.த) 2004 மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புலம் பெயர்ந்து வாழும்
பழைய மாணவர்கள் சார்பில்
R.ஜெயகாந்தன்
ஜேர்மனி

தாயகத்தில்
தன்னலமற்ற சேவையில்
அகவை 50ஐ
பூர்த்தி செய்யும்
எமது ஆசிரியரின்பொன் விழாவை முன்னெடுக்கும்
பொன்விழாக் குழுவினருக்கு
எம் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிப்பதுடன்
இவ்விழா சிறக்கவும்
இவ்விழாவினூடு எம் ஆசான் மேலும் பல்லாண்டு
சிறப்புடன் வாழும் ஒரு
மன உறுதியை எல்லாம் வல்ல கற்பக விநாயகர்
வழங்க வேண்டுமென வேண்டியும்
இவ்விழாக் குழுவினருக்கு ஆதரவாக
புலம்பெயர்ந்த பழைய மாணவர்கள்
ஆகிய நாம் ஒன்று சேர்ந்து
பொன்விழா நிதியாக ஐம்பாதாயிரம் ரூபாவை (50000ரூபா)
மனப்பூர்வமாக அனுப்பிவைக்கிறோம்.

நன்றி

R.ஜெயகாந்தன்
(ஒப்பம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு S.தயாபரன்
கிராமசேவையாளர்
கோப்பாய் தெற்கு(J/260)
கோப்பாய

தனியார் கல்வி நிறுவன வரலாற்றில் தனக்கென ஒரு தனி இடத்தைப் பெற்றதும், கோப்பாய் மண்ணில் முதன் முதல் ஆரம்பிக்கப்பட்டதுமான எங்கள் எக்ஸ்பிறஸ் கல்வி நிறுவனம் தனது அதிபரும், நிறுவுனரும் எம் கணித ஆசானுமாகிய திரு.வரதன் ஆசிரியர் அவர்களிற்கு பொன்விழா எடுப்பது சாலப்பொருத்தமானது. தனது வயதின் பாதிக்கு மேற்ப்பட்ட காலத்தை உழைப்பை தனது கல்வி நிறுவன வளர்ச்சிக்காக அர்ப்பணித்த பெருந்தகை எங்கள் வரதன் ஆசிரியர் என்றால் மிகையாகாது.

மாணவர் பருவம் என்பது வெள்ளை வெற்றுத்தாள் போன்றது. அதில் நாம் சிறந்த, நல்ல ஒழுக்க விழுமியங்களை மிக இலகுவாக பதித்துவிட முடியும். அது அவர்களின் பிற்கால வாழ்வின் உயர்ச்சிக்கு இன்றியமையாத ஒன்றாகிவிடும் அந்த வகையில் திரு வரதன் ஆசிரியர் வரவு வகுப்பறை அமைதி, நிறுவன ஒழுங்கு என்பவற்றை மிகவும் கண்டிப்புடன் கண்காணிப்பார் அதனால் கோப்பாய் பகுதி ஏன் யாழ்ப்பாணம் முழுவதிலும் சிறந்த ஒரு மாணவர் பரம்பரையை உருவாக்கிய பெருமை அவரிற்குண்டு.

காலத்திற்கேற்றாப்போல் தன்னை மாற்றியமைத்து, மழைக்காளான் போல் புதிது புதிதாய் பல தனியார்கல்வி நிறுவனங்கள் முளைத்தபோதும் தனது தனித்துவத்தினால் அவற்றிற்கெல்லாம் ஈடு கொடுத்து ஈடிணையற்ற கல்வி நிறுவனமாக திகழ்ந்து வருகிறது.

வாழ்க்கைப் பந்தயத்தில் அரைச்சதம் போட்ட திரு வரதன் ஆசிரியர் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து கல்விப்பணியாற்ற எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்கிறேன்.



நன்றி

பழைய மாணவன்
S.தயாபரன்
ஒப்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சி.பிரணவரூபன்
பொறியியலாளர்
நாவலடி, கோப்பாய்.

# எக்ஸ்பிறஸ் இட்ட அத்திவாரம்

எக்ஸ்பிறஸ் கல்வி நிறுவனத்திற்கு கல்வி கற்பதற்காக என்னை அனுப்புவதற்கென எனது பெற்றோர் தீர்மானித்த அந்த நாள் எனக்கு இன்றும் நினைவிருக்கின்றது. எனது இரு மூத்த சகோதரிகளும் அங்கு கல்வி பயின்று கொண்டிருந்தனர். அந்த நிறுவனத்தின் கட்டுப்பாடுகளும், வரதன் ஆசிரியரின் நிர்வாகமும் பற்றி அவர்கள் உரையாடுவதை நான் கேட்டிருந்தேன். அதனால் அங்கு போவதற்கு மிகவும் பயந்து கொண்டு சென்றதால் அந்தத் தினம் மனதில் பதிந்துவிட்டது.

ஒழுங்கும், கட்டுப்பாடும் பயமுறுத்தி எமது மனதில் அந்த நேரத்தில் வெறுப்பை ஏற்படுத்தினாலும், இன்று நாம் பல்கலைக்கழகம் சென்று பட்டதாரிகளாக வெளியேறுவதற்கு நல்லதொரு அத்திவாரமிட அவையே காரணமாயின. எந்த ஆசிரியர் வராவிட்டாலும் அதற்குப் பதிலாக மற்றொருவர் வந்து தொடர்ச்சியாக வகுப்புகள் நடைபெறும். இதனால் கல்வி இடையறாது தொடரும். மாதாந்தப் பரீட்சைகள் நடைபெறுவதால் நாம் அன்றாடம் கற்றவற்றை மீண்டும் படித்து பரீட்சைக்குத் தயாராவோம். இதுவும் மாணவர்களின் திறமையை வளர்க்க ஒரு காரணம் எனலாம். இங்கு கல்வி பயின்ற பெரும்பாலானோர் திறமையான சித்திகளைப் பெற்றனர்.

இந்நிறுவனம் ஆரம்பம் முதல் இன்று வரை எமது பிரதேச மாணவர்களின் திறமைகளை வளர்ப்பதற்கு பெரும் பங்காற்றி உள்ளது. கல்வியுடன் நில்லாது விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் என்பனவற்றையும் நடாத்தி எம்மிடமிருந்த பிற திறமைகளையும் இந்நிறுவனம் வளர்த்தது. ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகியவைகளும் எம்முள் விதைக்கப்பட்டன. எனது மூத்த சகோதரியான மேகலா விஞ்ஞான கணனிச் சிறப்புப் பட்டதாரியாகவும், எனது அடுத்த சகோதரி சிவமாலா மருத்துவராகவும், நான் பொறியியலாளராகவும் பட்டம் பெறுவதற்கு இந்த நிறுவனம் காலகோள் இட்டுள்ளது. இந்நிறுவனத்தை உருவாக்கி திறம் பட நிர்வகித்து வரும் திரு.வரதராஜா அவர்களின் ஆளுமையும், நிர்வாகத் திறமையுமே இதன் வெற்றிக்கு முக்கிய காரணமாகும். இவர் இப்பணியை மேலும் பல்லாண்டுகள் செய்யவேண்டுமென்று இறைவனை மனப்பூர்வமாக வேண்டுகின்றோம். அவருக்கு எமது மனமார்ந்த நன்றிகளையும், பணிவான வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

பழைய மாணவன்
சி.பிரணவரூபன்
(ஒப்பம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித நல்லாசானே புகழோடு வாழியவே!

நல்லா சிரியனாக நானிலத்தே தான்மிளிர்ந்து
எல்லோர் மனங்களிலும் நிறைந்தவரே
அல்லும் பகலும் அயராது மாணவர்க்காய்
அருஞ்சேவை செய்கின்ற தூயவரே
வல்ல கணிதநல் லாசானாய் விளங்கும்
வரதராஜா என்னுமுயர் வளர்மதியே
எல்லா வளங்களும் இப்பாரில் பெற்று
நலமோடு வாழ வாழத்துகின்றோம்.

பொன்விழாக் காணுகின்ற புனிதநல் லாசானே
போற்றுகின்றோம் நின்பணியை என்றும்
எண்ணிலா மாணவர்கள் ஏற்றமுடன் திகழ்ந்திட
ஏணிப் படியாக நிற்பவரே
கண்கண்ட தெய்வமே கணித நல்லாசானே
கருணை யுள்ளங் கொண்டவரே
மண்ணிலே நின்பணி என்றுமே சிறந்திட
மனதார வாழ்த்துகின்றோம் வாழிய வாழியவே!

ஆற்றலும் அறிவும் அவனியிலே தான் துலங்க
ஏற்றமுடன் நற்சேவை செய்பவரே
போற்றுமுயர் இருபாலை எக்ஸ்பிரஸ் நிறுவனத்தின்
பொன்னான நல்லதிபர் ஆனவரே
ஏற்றமுயர் கல்விக்காய் என்றுமே உழைக்கும்
எம்மினிய ஆசான் வரதாராஜாவே
போற்றுகின்றோம் உம்மை பொன்விழா நாளினிலே
புனிதநல் லாசானே புகழோடு வாழியவே!



நன்றி

ஆசிரியரின் மாணவர்கள், சிவபாலசிங்கம் ஜெயகாந்
சிவபாலசிங்கம் சந்திரகாந், சிவபாலசிங்கம் கௌசிகா
சிவபாலசிங்கம் சிவரங்கன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Experiences during in my educational years with our director

The director of Irupalai Express Institute, guide to students like me and my honourable teacher Mr.Varatharajah. I have great pleasure in coming to knoaw that our honourable teacher has reached his Golden Jubilee year.

It is crystal clear that the educational development of students in the Jaffna peninsula has been the work of private tutories. In this regard this institution has been guiding the student community for almost thirty two years. I am happy that I am one of the second generation of my family being educated here.

It is eight years since I started receiving education at this institute. I have received not only education, but also discipline and good habits. our educational institute is in all respects a full fledged college. Those out side this institute don't under stand the value of education imparted here. Any student who steps into this institute leaves it as a good citizen. Whatever the environment the student may come from when he leaves this institute is changed for the better. this is not what others have told me, but experienced during my eight years here.

The reason for the rapid growth of this educational institution has been our director. two years after joining this institute I didnot have any opinion about it. I don't know whether it was because I was too young or that I didn't get the opportunity to have close contact with him. But after I was made monitor in grade six, my contact with the administration of the institute grew strong. As a result, I had the chance of knowing our director very well.

During my period as monitor I have received enough punishment but whenever I think of repeating that mistake I leave that idea after remembering our director. in this was during the past six years the bad behaviour has been removed from my mind and good behaviour instilled inme after joining our educational institution, my habits changed for the better like the scent of a flower enveloping the whole at mosphere.

In 2003, the director was our mathematics teacher. as a result, I had the opportunity of knowing him further our director thinks that work should not be delayed or postponed. He was strict in the sense that work has to be done according to the set guidelines and planned accordingly. Class rooms and the premises of the institute has to be orderly, clean and silent. He feels that his knowledge should be imparted to his students. His motive was to make students do well in studies examinations are held for all



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

In 2003, the director was our mathematics teacher. as a result, I had the opportunity of knowing him further our director thinks that work should not be delayed or postponed. He was strict in the sense that work has to be done according to the set guidelines and planned accordingly. Class rooms and the premises of the institute has to be orderly, clean and silent. He feels that his knowledge should be imparted to his students. His motive was to make students do well in studies examinations are held for all classes and especlally 0/L students are frequently tested.

I wish to tell the studen ts one thing. All the activities carried out by the director is for your benefit. you will definitely reap the harvest of co-operting fully in all the activities done by the director.

Further, I am indebted to the excellent teaching staff during my ordinary level. The most important reason for wanting to write my experiences in English is due to my honourable english teacher Mr.s.k.Mahalingam. I know fully well the difficulty he underwent to teach us English when all of us hated the subject.

Being a guide and incentive in my development, I hope and pray that our director will have a long and prosperous life so that our future generations too can be guided by our director.



Thank You

Subah Rajendrean
(2004 0/L - 0ld girl)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





2002 ஆம் ஆண்டு செப்ரெம்பர் - நவம்பர் வரை ஐரோப்பிய நாடுகளுக்கான சுற்றுப்பயணத்தினை மேற்கொண்ட வேளையில், ஐரோப்பிய நாடுகளில் உறவினர்களுடனும், நண்பர்களுடனும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சி.பரணிதரன்
பெறியியலாலர்,
டச்சு வீதி,
இருபாலை.

# மானிட ஏணி

எழுத்தறிவித்தன் இறைவனாவான் என்று சொல்லுவார்கள். மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற நாற்குரவர்களிலும் அஞ்ஞானத்தை போக்கி அறிவைத் தருபவரே குரு எனப்படுவர். அஞ்ஞானத்தை மனதில் நிறைத்தவர்கள் "மாக்கள்" எனப்படுவர். அஞ்ஞானத்தை போக்கி ஞானத்தை நிறைத்து மாக்களை மக்களாக்குவதற்கு மாணவர்களை நல்வழிப்படுத்துபவரே நல்லாசிரியராவார்.

தற்கால உலகில் நற்தொழில் நாடி நன்றாக வாழ கல்வி இன்றியமையாததாகும். பொருளில்லார்க்கு இவ்வுலகில்லை என்பார்கள். தொழில்சார் தேவைகளினால் மாணவர்கள் அங்கொன்று, இங்கொன்றாக தனியார் கல்வி நிலையங்களில் ஓடி, ஓடி கல்வி கற்கின்றனர். நன்றாக பயில்கின்றார்களோ, இல்லையோ மாணவர்களுக்கு பொழுது நன்றாக கரைகின்றது, அத்துடன் பெற்றோர்களின் பணமும் சேர்ந்து கரைகின்றது, ஆசிரியர்களின் தேவைகளும் நிறைவேறி விடுகின்றது. இவற்றிற்கெல்லாம் விதிவிலக்காக மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் மட்டுமல்ல ஒழுக்கத்திலும் அக்கறை எடுத்து வரும் தனியார் கல்வி நிலையங்களில் இருபாலையிலுள்ள எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் குறிப்பிடத்தக்கதாகும். தாரமும், குருவும் தலைவிதிப்படி என்பார்கள் அந்த வகையில் நல்ல குருவாக இருந்து மாணவர்களுக்கு கல்வி மட்டுமன்றி, ஒழுக்கமும் வேண்டியதே என்று எண்ணி ஆத்மார்த்தமாக ஆசிரியத் தொழிலை ஆற்றுபவரே! ஏணியாக இருந்து மாணவர்களை நன்னிலைப்படுத்துபவரே! வையத்துள் வாழும் தெய்வமாக போற்றப்படுவார்.

கல்வி எனின் கண்ணெனப் போற்றும் எமது பாரம்பரியத்தில் பல மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் கடந்த 32 ஆண்டுகளாக பெரும்பாங்காற்றி வரும் இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் அதிபராக, நல்ல குருவாக இலக்கணம் வகுத்து நற்பணியாற்றி தனது ஐம்பதாவது அகவை காணும் ஆசிரியர் திரு.த.வரதராஜா அவர்கள் மேலும் பல்லாண்டு காலம் மாணவர்களின் வளர்ச்சியில் ஏணியாக துலங்கி நற்பணியாற்றி வாழ வாழ்த்துகின்றேன்.

"விருட்சமாய் நீர் விழாது நிழல்தர விழுதுகள் நாங்கள் தாங்கி நிற்போம்"
வாழ்க!



நன்றி

பழைய மாணவன்
சி.பரணீதரன்
(ஒப்பம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழ்பாடி வாழ்த்துகின்றோம் ...

வானம் குடை பிடிக்க
நிலவு கவி பாட
கடலலை தாலாட்ட
பூக்கள் வாசம் வீச
வண்டுகள் ரீங்காரம் பாட
பூமி மகளே
புகழ் பாட
கலைக் கோயிலே
நீர் பிறந்தீர்
பொன் விழாக்காணும் நேரமதில்
புகழ் பாடி வாழ்த்து கின்றோம்
கோடி ஆண்டுகள் வாழ்கவென...

இறைவன் துணை இருக்க
இதயம் இணைந்திருக்க
இலக்கியம் துணையிருக்கு
இருள் அகற்றி
ஒளி கொடுக்கப் பிறந்த
கருணைக் கோயிலே
பொன்விழாக் காணும் நேரமதில்
புகழ்பாடி வாழ்த்து கின்றோம்
கோடி ஆண்டுகள் வாழ்கவென....

வளர்ந்து வரும் சந்ததியினருக்கு
வரதன் என்ற நாமத்தில்
கணிதம் கற்பித்து
கல்விக் கண்திறந்த ஐயா!
கலக்கமில்லா வாழ்வில்
காலமெல்லாம் வாழ
பொன்விழாக் காணும் நேரமதில்
புகழ்பாடி வாழ்த்துகின்றோம்
கோடி ஆண்டுகள் வாழ்கவென..

துணிந்த செயலும்
பணிந்த நடையும்
வீரப் பேச்சும்
கல்விக்கு உரமிட்டு
அணையாத தீபமாய்
அகிலமெல்லாம் நீ வாழ்கவென
பொன்விழாக் காணும் நேரமதில்
புகழ்பாடி வாழ்த்துகின்றோம்
கோடி ஆண்டுகள் வாழ்கவென...



நன்றி

சி.சதீஸ்குமார் (பழைய மாணவன்)
O/L - 1998
A/L - 2001



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மு.காண்டீபன்
இருபாலைச் சந்தி,
கோப்பாய்.

திரு.த.வரதராஜா ஆசிரியர் அவர்களின்
50வது பிறந்த நாள் விழாவை இட்டு
அவரை சகல சுகபோகங்களையும்
பெற்று பல்லாண்டு காலம் வாழ்க! வாழ்க!
என எல்லாம் வல்ல கற்பக விநாயகனை
வேண்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

1973ம் ஆண்டு தரம் 8க்கான புலமைப்
பரீட்சைக்காக அவரிடம் கல்வி கற்று
அப் பரீட்சையில் முதல் மாணாக்கனாக
சித்தியடைந்தமை அவரைச் சாரும்
அத்துடன் எக்ஸ்பிரஸ் இன்ஸ்ரிரியூட்
ஆரம்பிப்பதற்கு உறுதுணையாக இருந்து
அவர் தன் ஆற்றல், கற்பித்தல் திறன், கட்டுக்
கோப்பு போன்றவற்றால் பல தரமான மாணாக்கர்களை
உருவாக்கிய பெருமை திரு.T.வரதராஜா ஆசிரியர்
அவர்களையே சாரும். அப்பணி தொடர
எல்லாம் வல்ல கற்பகப் பெருமான் அருள் புரிய
வேண்டும் என்று ஆசி கூறி பகவான் பாதம் பணிகிறேன்.



நன்றி

இங்ஙனம்
K.காண்டீபன் (ஒப்பம்)
(பழைய மாணவன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராமணோடை,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.
08.02.2005

# வாழ்த்துச் செய்தி

*"இலட்சியப் பாதையில் சில கற்கள்
இடறும் தளராதே, தொடர்ந்து ஓட நினைத்தால்
நியூட்டன் விதியை மட்டுமல்ல
ஐன்ஸ்டைன் அறிவையும் வெல்லலாம்"*

என்ற கருத்திற்கிணங்க இருபாலை "எக்ஸ்பிரஸ் இன்ஸ்ரிரியூட்" நிறுவனமானது தனது இலட்சியப் பாதையிலே அறிவை மட்டுமல்ல விதியையுமே வென்று தனது 32ஆவது அகவையிலே தடம் பதித்து நிற்கின்றதென்றால் அது மிகையல்ல. அத்தகைய கல்வி நிறுவனத்தை நிறுவி அதன் அதிபராகவும் கடமையாற்றுபவர் யாழ் மத்திய கல்லூரியின் கணித ஆசானும், மாணவர் ஒழுக்கக் கட்டுப்பாட்டு ஆசிரியருமாகிய திரு.த.வரதராஜா ஆசிரியர் அவர்கள்.

கணிதத்தையும் இனிமையாகக் கற்பித்த, கற்பிக்கின்ற ஆசிரியர் அவர்கள் நல்லொழுக்கம் மிக்க மாணவர்களையும் உருவாக்குகின்றார். இத்தகைய பெருமை மிக்க வரதராஜா ஆசிரியர் அவர்கள் தனது 50ஆவது அகவையிலே தான் கொண்ட இலட்சியத்தில் திடமாகத் தடம் பதித்துக் கொண்டிருக்கின்ற இன்றைய நாளிலே அவரை நீடுழி வாழ்கவென வாழ்த்துவதுடன் அவருடைய சேவையும் வளர்ச்சி பெற வேண்டும் என வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.



நன்றி

பழைய மாணவர்கள்
ஞா.சுயாதரன்
ஞா.கருணாதரன்
ஞா.சுயதர்சினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



க.மகிந்தன்
உதவிப் பொறியியலாளர்,
கட்டடங்கள் திணைக்களம்,
கிளிநொச்சி.

பொன்விழா காணவுள்ள எனது முன்னைநாள் ஆசிரியரான திரு.த.வரதராஜா அவர்கள் சிறந்த நிர்வாகத்திறனும், கற்பித்தற் திறனும் ஒருங்கமைந்த ஓர் நல்லாசானாகத் திகழ்ந்து வந்திருக்கின்றார்.

நீண்ட வரலாறு கொண்ட இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டின் அதன் ஆரம்பகாலம் முதல் இவரினது நிர்வாகத்தின் கீழ் தனியே மாணவர்களினது புத்தகக்கல்வி முன்னேற்றத்தை மட்டும் கருத்தில் கொள்ளாது அவர்களினது பன்முக ஆளுமையை வெளிக்கொணரும், விருத்தி செய்யும் வகையில் விளையாட்டு நிகழ்வுகள், கலைநிகழ்வுகள் போன்றவற்றையும் நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவரினது வழிகாட்டலின் பால் பெற்றோரும், மாணவரும் வைத்திருக்கின்ற பெரும் நம்பிக்கையே கோப்பாய் மட்டுமன்றி, கல்வியங்காடு, கைதடி போன்ற தொலைஇடங்களில் இருந்து மாணவர்களை இந்நிறுவனம் ஈர்த்தது காரணமாய் அமைந்துள்ளது. தனியே வகுப்பறைக் கட்டுப்பாடு, ஒழுக்கம் என்பவற்றையும் விஞ்சி வகுப்பு முடிந்து வெளியேறும் போதும் சரி, வேறு அலுவல்கள் தொடர்பான வீதிப்பயன்பாட்டின் போதும் சரி இவரினது மாணவர்கள் வீதிஒழுங்கை கடைப்பிடிக்க தூண்டுவது மாணவர் சமுதாயம் மீது கொண்டுள்ள அக்கறையைக் காட்டுகின்றது.

இவை மட்டுமன்றி கணிதபாடத்திலும் ஓர் முன்மாதிரி ஆசானாக திகழ்வது இவருடைய மாணக்கரின் பரீட்சைப் பெறுபேறுகள் மூலம் தெளிகைப் புலனாகின்றது.

இத்தகைய ஆளுமைகளை தன்னகத்தே கொண்டுள்ள நல்லாசானை தமது முன்னேற்றத்தினைக் கருத்திற்கொண்டு யாழ் மத்தியகல்லூரியும் தகுந்த பதவியில் அமர்த்தி பயன்பெற்று வருகின்றமை இவருக்கு கொடுக்கப்பட்டுள்ள ஒரு அங்கீகாரமாகும்.

இத்தருணத்தில் பொன்விழாக் காணுகின்ற திரு.த.வரதராஜா ஆசிரியரை பழைய மாணாக்கன் ஆகிய நான் சேவைகளைப் பாராட்டுவதுடன் எனது ஆசான் அவர்கள் மென்மேலும் மாணவசமுதாயத்திற்கு அரும்பணிகள் ஆற்றிடவும், வளமுடன் வாழவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.



நன்றி

க. மகிந்தன் (ஒப்பம்)
பழைய மாணவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுவன ஆசிரியர்களின் நெஞ்சங்களிலிருந்து

தோன்றிற் புகழொடு தோன்றுக ...... என்ற வள்ளுவன் வாக்கிற்கு அமைய மாணவர்கள் மத்தியில், ஏன் ஆசிரியர்கள் மத்தியிலும் கூட ஒரு புகழ் பூத்த ஆசானாகத் திகழ்பவர் எமது எகஸ்பிறஸ் அதிபர் என்றால் அது மிகையாகாது.

விளையும் பயிரை முளையில் தெரியுமென்பார்கள் சிறுவயதிலிருந்து எத்தனையோ இன்னல்கள் மத்தியிலும் வாழ்ந்து வளம் மிக்க மனிதராகத் திகழ்ந்து தான் வாழும் சூழலில் உள்ளவர்களுக்கு ஏதாவது செய்யவேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தோடு காலத்திற்குக் காலம் பல இடையூறுகளையும் பல துர்ப்பாக்கிய நிகழ்வுகளையும் சந்தித்தும் மனம் தளராது "எண்ணித்துணிக கருமம் துணிந்த பின் எண்ணுவம் என்பது இழுக்கு" என்ற உயர் நோக்கோடு தான் எடுத்துக் கொண்ட பணியை எள்ளளவும் கூட சளைக்காது இன்றுவரை செயலாற்றி வரும் எம் அதிபர் இன்று பொன்விழாக் காண்கின்றார்.

அந்தவகையில் பொன்விழாக் காணும் எம் அதிபர் தொடர்பாக அவரது செயற்பாடுகள் சில தவறானவை என்ற தொனியில் துண்டுப்பிரசுரங்களும் வெளிவரத் தொடங்கியுள்ளன. நிறுவனத்தின் வளர்ச்சி கண்டு அழுக்காறு கொண்ட அடிவருடிகளின் செயல்கள் தான் இவை. நெஞ்சில் துணிவிருந்தால் நேர்மைத்திறமிருந்தால் அவர்கள் எம்முன் நேரடியாகப் பேசலாம். நலன்விரும்பிகள் என்ற போர்வையில் நாத்திறமையற்ற நயவஞ்சகர்களின் இச்சலசலப்பிற்கு மாணவ சமுதாயமும் ஆசிரியகுழாமும் பெற்றோர் சமூகமும் சஞ்சலப்படப் போவதில்லை.

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்ற வாக்கிற்கு அமைய நாம் செயற்படுகின்றோம்.

இப் பொன்விழாவினைக் கொண்டாடுவதற்கு எமது அதிபரைப் பல வழிகளில் வற்புறுத்தியே நாம் இணங்க வைத்துள்ளோம். இதனை இங்குள்ள மாணவர்களே நன்கு அறிவர். இவ்விழாவிற்குப் புலம் பெயர்ந்த மாணவர்கள், பழைய மாணவர்கள், ஆர்வலர்கள் என்று பலரிடமிருந்தும் நிதிகள் அன்பளிப்பாக எமக்குக் கிடைத்துள்ளன. அவர்களுக்கு இந்தநேரத்தில் எமது அன்பு கலந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

எவ்வெவ் இடர்வரினும் அவற்றிற்கு முகம் கொடுத்து நிறுவன வளர்ச்சிக்கும் அதன் முழுமையான சேவைக்கும் நாம் எந்த நேரத்திலும் எப்போதும் ஆதரவு வழங்குவோம் என்பதை இங்கு கூறிவைக்க விரும்புகின்றோம். "காய்க்கும் மரத்திற்குக் கல்லெறி விழும்" எமது அதிபர் பட்ட மரம் அல்லர். என்றும் காய்க்கும் மரமே! அதிபரின் தொடர்ச்சியான சேவைக்கு எமது வாழ்த்துக்களும் ஆசிகளும் என்றென்றும் உண்டு என்பதை மனநிறைவோடும் மனமகிழ்வோடும் கூறுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கணிதம் என்றால், வரதர்; வரதர் என்றால் கணிதம்" என்று ஆசிரியர் மத்தியிலும் "கணிதம் என்றால் அது வரதன் சேர்தானடா" என்று மாணவர்கள் மத்தியிலும் பெருமையோடு பேசப்படுகின்ற எம் அதிபர் எத்தனையோ பல அறிஞர்களை, ஆசான்களை, கவிஞர்களை, கலைஞர்களை, வைத்தியகலாநிதிகளை, பொறியியலாளர்களை, தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு தானும் தன்னுடைய கட்டுக்கோப்பும் மிக்க ஆசிரியர்குழாத்துடன் சேர்ந்து உருவாக்கி மனிதசமூகமே பிரமிக்கக்கூடிய விதத்தில் தன் கல்விப்பணியினை இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றார். இப்பணி மென்மேலும் தொடரவேண்டும். இன்னும் பல விற்பனர்கள் தோன்ற வேண்டும். அதற்கு எமது அதிபர் செய்யும் ஒவ்வொரு செயற்பாட்டிலும் அவரோடு பின்னிப்பிணைந்து செயற்படும் ஆசிரியர்கள் கைகொடுக்க சித்தமாக இருக்கிறார்கள் என்றால் அது மாணவர் சமுதாயம் செய்த வரப்பிரசாதமே.

வரதன் சேர் என்றால் கண்டிப்பானவர் ஆம் மாணவர்களோடும் சரி ஆசிரியர்களோடும் சரி நியாயத்திற்கு அப்பால் செல்லாது கடமை உணர்வோடு மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு கண்டிப்போடு செயற்படுபவர். ஆனால் அவர் உள்ளத்திலோ கள்ளமில்லை; கபடமில்லை வைத்துச் சாதித்து வாட்டும் பழக்கமில்லை. ஒவ்வொருவருடைய நிலையறிந்து அவர்களுடைய நிலைக்குத்தக்கவாறு தன்னுடைய வியூகத்தை மாணவர் சமுதாயம் என்றும் வளம் பெறவேண்டும் என்ற எண்ணத்தோடு செயற்படுகின்ற எமது நிறுவன அதிபர் இன்னும் பலசிறப்புக்களும் பெற்று, இன்னும் பற்பல விழாக்காணும் விதத்தில் வளம் பெற்றுவாழ எல்லாம் வல்ல கற்பக விநாயகர் அருள்பாலிக்க வேண்டும் என்று, ஆசிரியர்கள் ஆகிய நாம் வேண்டி நிற்கின்றோம்.

வாழ்க வரதர் புகழ்
வளர்க அவர் நாமம்



நன்றி

The Express Institute
Irupalai, Kopay.

ஆசிரியர் குழாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Varathan's a close associate speaks ....

I am pleosed to send this message of felicitation on the occasion of Golden Jubilee celebration of my close associate 'Varathan' with whom I have had acquaintance for over 25 years.

Varathan is a man of many parts and varied interests, His fine qualities may be attributed to his family background and upbringing.

He is respected for his diligence, dedication, integrity and justice. sans all the negative influences of money, power and politics.

He is a strict disciplinarian who insists on punctuality He accomplishes his tasks honourably. He excels in all duties and activities associated with administration. He is a teacher par excellence in mathematics.

He is fond of his students and does everything within himself maintain friendship and harmony.

He is never a person to be defeated. He gives us comfort, love and care.

May his selfless service continue for many more years is my earnest wish and prayers.

s.k mahalingam(sgd)
English teacher



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழா நாயகன் வாழ்க

வரம் இருந்து பெற்ற – எங்கள்
வரதராஜா ஆசானே
பொன்விழாக் காணும் – எங்கள்
ஆசான் ரதங்களில் ஒரு ரதன்

பார் போற்றும் அளவிற்கு புகழாம்
எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரியூட்
அதன் அதிபராம் வரதராஜா
ஒழுக்கம், கண்ணியம், கடமை – தவறாது
வளர்த்திட்ட ஆசானாம்

கணிதம் என்றால் கசக்கும் – அதனை
அடித்து அடித்து ஊட்டி வைப்பாராம்
எங்கள் ஆசான் வரதராஜா மாணவர்களை
அன்பாக அரவணைத்து – பிழைஎன்றால்
சட்டென்று போடுவாராம் ஒரு அடி தடியால்
சிணுங்கி அழுதிட்டால் வாவென்று அணைத்திடுவார்

வாழ்க ஆசான் – வளமுடன்
என்றென்றும் நீடூழி வாழ்க

செ.பிரியதர்சினி
தரம் $6^A$

# அகரத்துக்கு நிகரானவர்

கற்பகப் பிள்ளையார் கருணை
கணித ஆசானின் திறமை
எக்ஸ்பிறஸின் வளர்ச்சியில் புதுமை
இவை அனைத்தும் உலகறிந்த உண்மை

அன்புக்கு ஓர் அணையா விளக்கு
ஆசானுக்கு எல்லாம் ஆசான் இவர்
இன்பமாய் இருக்கும் எமக்கு
ஈகையால் கிடைத்த ஆசான்

உண்மைக்கெல்லாம் உறைவிடமாய்
ஊருக்கே கல்வித் தெய்வமாய்
எம் மனதில் கல்வித் தீபமாய்
ஏற்றுவோம் போற்றுவோம் வாழ்த்துவோம்

ஐயமற கற்பிக்கும் எம்ஆசான்
ஒற்றை மனிதனாய்
ஓர் நிறுவனத்தின் அதிபராய்
ஔடதமாய் விளங்குகின்றார் கல்விக்கு

கு. டிலீப் அமுதன்
தரம் $11^B$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வெற்றிப்பாதையில் ஒருபடி

"உரன் என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரன் எனும் வைப்பிற்கு ஓர் வித்து"

எனும் பெருநாவலரின் கூற்றிக்கிணங்க அறிவு எனும் கருவியினால் ஐம்பொறிகளாகிய யானைகளை அடக்கி காக்க வல்லவராக திகழ்பவர் எங்கள் வரதன் ஆசிரியர். எங்கள் ஆசிரியரும் எக்ஸ்பிறஸ் கல்வி நிறுவ னமும் மாணவ சமுதாயத்திற்கு கிடைத்த ஒரு வைரஏணி என்று கூறுவதே சாலப்பொருத்தமானதும், சிறந்ததும் ஆகும். ஒரு கல்விக் கூடத்தை நிறுவுதல் ஆயிரம் சிறைக்கூடங்களை மூடுவதற்கு ஒப்பானது. என்பது மூத்தோர் வாக்கு அதற்கிணங்க எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் மாணவர்களுக்கு நற்பண்புகளை ஊட்டி நற்பிரஜைகளாக ஆக்கித்தந்தள்ளது. ஒரு மாணவன் கல்வியை முழுமையாகக் கற்க வேண்டுமானால் அவனுக்கு முதலில் நல்ஒழுக்கம் அவசியம். ஒழுக்கம் இல்லாவிட்டால் ஒருவன் கற்ற கல்விக்கு மதிப்பு இல்லாமல் போய்விடும். கல்விக்கு அடிப்படையான ஒழுக்கத்தையே கருப்பொருளாகக் கொண்டு இயங்கி வருவது எக்ஸ்பிறஸ் கல்வி நிறுவனம். எல்லாக்கல்வி நிறுவனங்களும் கல்வியையே போதிக்கிறது ஆனால் எக்ஸ்பிறஸ் நிறுவனம் மட்டுமே கல்வியுடன் நற்பண்புகளை போதிக்கிறது. இவையாவும் எங்கள் ஆசிரியர் அயராத உழைப்பின் பயனே.

மேலும் எந்த ஒரு விடயத்தையும் எடுத்துக்கொண்டால் நேரம் தாழ்த்தாமல் செய்ய வேண்டும். அதேபோல் கல்விகற்க செல்வதானலும் நேரம் தாழ்த்தாமல் செல்ல வேண்டும் இதையே எமது அதிபர் எமக்கு போதித்து வருகிறார். அத்துடன் வரவின்மை விடயத்தில் மிகுந்த கண்டிப்புடன் இருக்கிறார். ஒரு விடயத்தின் அணுகுமுறை கடினமாக உள்ளது என்று அதனை செய்யாது விடக்கூடாது. வெற்றிக்கனியைப் பறிக்க வேண்டுமானால் கஷ்டப்பட்டே பெறமுடியும். இதுபோல் தான் நேரம் தாழ்த்தி செல்லுதல், வரவின்மை தொடர்பாக அதிபரின் தண்டனைகள் கடினமாக இருந்தாலும் அதன் விளைவுகள் மிகவும் இனிமையானதாகவே இருக்கும்.

ஒருவர் வெற்றிப்பாதையை நோக்கிச் செல்லும்போது சில விஷக் கிருமிகள் அவ்வெற்றியை கெடுக்க திட்டம்தீட்டுவார்கள் அதேபோன்று எங்கள் அதிபரின் வாழ்விலும் சில விஷக் கிருமிகள் புகுந்தன. அக்கிருமிகளை அழித்து எங்கள் அதிபருக்காக மாணவர்களாகிய நாங்கள் எப்போதும் தோளோடு தோள் நிற்போம்.



நன்றி

த.கவிதா
தரம் 11[B]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரதன் சேர் ஒரு வரப்பிரசாதம்

வரதன் சேர் என்றால் பயம்! வகுப்பில் குழப்படி செய்பவர்களுக்கு வரதன் சேறென்றால் பயம்! ஒழுங்காக வகுப்பிற்கு சமூகமளிக்கா தவர்களுக்கு வரதன் சேறென்றால் பயம்! மொத்தத்தில் ஒழுக்கம், கட்டுப்பாடு இல்லாமல் அன்றாடம் கல்வியை கவனமாக கற்காமல் இருப்பவர்களுக்கு வரதன் சேறென்றால் பயம்! ஆனால் தினமும் ஒழுங்காக வகுப்பிற்கு வந்து அக்கறையாக பாடங்களைப் பயிலும் என்போன்ற மாணவர்களுக்கு அவர் மிகவும் நல்லவர்.

நான் வரதன் சேரிடம் வரும்போது பயந்து பயந்து வந்தேன். ஆனால் 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைய இந்த கல்வி நிறுவனம் தான் வழிவகுத்தது. ஒவ்வொரு நாளும் பாடங்களை ஒழுங்காக கற்று மாதந்தப் பரீட்சைக்கு இங்கு தோற்றுவதால் எனக்கு புலமைப்பரீசில் பரீட்சையில் நல்ல மதிப்பெண்ணை பெறக்கூடியதாக இருந்தது எனது தம்பியும் இங்கு கல்வி பயின்று வருகிறார்.

மருந்து சாப்பிடும் போது கசப்பாகத்தான் இருக்கும் ஆனால் அது எவ்வெவ் வகை வருத்தத்தை மாற்றுகிறது என்பதை நாம் உணர வேண்டும். அதுபோல் வரதன் சேரின் கட்டுப்பாடும் கண்டிப்பையும் பார்க்கும்போது கசப்பாகத்தான் இருக்கும்.

ஆனால் அதுவே எம் உள்ளத்திலே ஆழமாக வேரூன்றி இருக்கும் சோம்போறித்தனம், கவனயீனம் குழப்படிபோன்ற தீய பழக்கங்களுக்கு நல்ல மருந்தாக அமைந்து. எம்மை வாழ்வில் நல்ல நிலைக்கு உயர்த்தும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.



நன்றி

பணிவு மாணவன்
இ.பிரணவநாத்
தரம் 6^



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழா நாயகனிற்கு

| | | |
|---|---|---|
| மக்கள் போற்றும் | - | உலகநாயகன் |
| மாணவர் கற்கும் யாழ் | - | மத்திய கல்லூரி நாயகன் |
| பூமி வியக்கும் | - | மேதைநாயகன் |
| செல்லுமிடங்களில் | - | சாந்தநாயகன் |
| பார்வையால் பயமுறுத்தும் | - | அக்னிநாயகன் |
| குடாநாட்டிற்கே | - | கணித நாயகன் ' |
| கண்டிப்பிலும் கனிவுள்ள | - | கருணைநாயகன் |
| தவறுகள் ஏற்படுமிடத்தில் | - | கோபநாயகன் |
| எச்செயலிலும் | - | கண்ணிய நாயகன் |
| அழகிய தமிழ்பேசும் | - | செந்தமிழ்நாயகன் |
| எச்சந்தர்ப்பத்திலும் | - | பொறுமைநாயகன் |
| எல்லாவற்றிக்கும் மேல் | | |
| எக்ஸ்பிறஸ் கல்வி நிறுவனத்தின் | - | கதாநாயகன் |
| இன்று வாழ்த்து பெறும் எங்கள் | - | பொன்விழா நாயகனே |

"பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்ந்து
சேவை புரிய வாழ்த்துகின்றேன் வாழ்க வளமுடன்"



நன்றி

ஆக்கம்
தட்ஷா யோகராஜா
தரம் 11B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரதரே வாழி

பொன்விழாக் காணும் எங்கள்
பொற்புடை ஆசானே – உம்
நற்றிறம் பாட வந்தேன், ஐயா
நலமுடன் வாழி நீரும்.

வரதன் என்னும் பெயரைப் பெற்றீர்
வரமன்றோ நாங்கள் பெற்றோம் – இரு
கரங்களைக் கூப்பி உம்மை
விருப்புடன் போற்றி நின்றோம்.

எண்ணத்தில் உயர்வைக் காட்டி
கண்களில் ஒளியை ஏற்றி – நற்
பண்பினில் உயர்ந்து நின்ற
பெருந்தகை வாழி என்றும்

ஆணவம் எதுவுமின்றி
மாணவர் குணமறிந்து – உயர்
எண்ணையும் எழுத்தையும் நாம்
பேணிட வழியைத் தந்தீர்.

ஆளுமை மிக்க ஆசான்
ஆண்டுகள் நூறு வாழி – தினம்
ஆண்டவன் அடியைத் தீண்டி
வேண்டுவோம், நன்றே வாழி!

செல்வி அ.மதுவந்தி
தரம் 7A

## உங்கள் பணி தொடர ...

வேப்பங் காயான கணித பாடம்
அமுதமாகியது
உங்கள் வழிநடத்தலில் தான்
படிப்படியாக
நாற்பதைத் தாண்டாத புள்ளிகூட
ஏறியது
விலை வாசி போல

கேட்கும் மோட்டார் வண்டிச்
சத்தத்தில் மண்
நிலத்தில் விழும் ஓசை கூடக்
கேட்கும்
கர்ச்சனை ஒலி கேட்டதும்
அடிவயிறு கலங்கும்

கொப்பி கொண்டு செல்லாத வகுப்பில்
குலதெய்வப் பிரார்த்தனை
கொவ்வை நிறக் கண்களைக்
கண்டால் – எல்லோர்
கண்களிலும் அலை பாயும்

கண்டிப்பும் கரிசனையும் காணலாம் – எங்கள்
ஆசிரியரிடம்
நன்றியுடன் மனம்திறந்து வாழ்த்துகின்றேன்
பொன்விழா அகவையில்
உங்களது பணி தொடர..........




ஆக்கம்
தர்ஷினி தங்கவேல்
(பழைய மாணவி O/L 2003)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Profound

When I was in panic
I saw your heart of titanic
you gave me an evolution
From the world of violation

When I thought of my ability
you gave me the versatility
when I was in the world of vicious
you gave me the anxious to become virtuous

When I thought of human Love
you taught me that it is like a glove
when my mind was in fluctuation
you taught me where to keep the punctuation

When I thought you about my blunder,
you have done a great wonder
when I felt happy with the world of maths
you gave me supersenses joy through the power of silence



Thank You

By.R.Senthuja
Grade $10^A$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருகை தாங்கும் மறு கை மீட்டும்
இன்னிசை வீணையின் சேவைக்கு வாழ்த்து

# கோல்டன்டச்

புகைப்படப் பிடிப்பாளர்





இருபாலைச்சந்தி, கோப்பாய்.

கங்கைபோல காவிரிபோல செந்தமிழ்போல
நீர் சீருடன் வாழி

# ரவி தையலகம்





இருபாலைச்சந்தி, கோப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமை கண்ணியம் கட்டுப்பாட்டுடன்
கல்வி தனை அளித்திடும் ஆசானே
நிலைத்திடுக இப் புவியில் நீடூளி

# செல்வன் டீசல்

## எஞ்சினிஜியேர்ஸ்





கோப்பாய்ச்சந்தி

கண்ணியங்கள் கரைதொட்ட கட்டொழுங்கு
கண்டோம் புண்ணியமாய் புது நிலவாய்
என்றும் பல்லாண்டு வாழி

# பிறைற்மன் கல்வி நிலையம்





பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.

ஐம்பது நீண்டு அறுநூறுஆக
அன்புள்ள ஆசி ஆகட்டும் என்றும்

# டினேஸ் அச்சகம்



கல்வியங்காடு, யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்விழாவில் பொன்னான வாழ்த்துக்கள்

பொன்னாக பொலிந்திருக்கும்
பொன்விழா பிறப்புடன்
புத்துயிர் பெற்று
புத்தறிவு மலர்ந்திட
புதுப்பாதை திறந்து

புத்தறிவு வரை
சத்தான அறிவுகள்
சொத்தாக மலர்ந்துவர
பொன்விழா நன்நாளில்
அதிபரை வாழ்த்துகிறேன்

பொன்விழா வாழ்த்துக்களை
பொலிவுடன் தருவதில்
இரட்டிப்பு மகிழ்ச்சி
ஆண்டு தோறும்
அறிவைத் தரும் ஆசான் வாழ்க

விடியாத ஓவ்வொரு மனித வாழ்விற்கும்
உங்கள் அயராத சேவை
விழிப்பை அறிவாக அளிக்கிறது
காலம் விரைந்தாலும் உங்கள் பணி
தொடர எனது வாழ்த்துக்கள்

வளம்அளித்து நலம்பெற
இனிய இன்ப வாழ்த்துக்கள்
உள்ளம் பூரித்த
என் இனிய வாழ்த்துக்கள்

ஆக்கம்
சஞ்கிகா ஜீவா
தரம் 9'B'

## விளக்கு

சுட்டும் விழிச்சுடராய் மாணவர்க்கு
ஒளி கொடுத்திடும் நல்லாசிரியராய்
ஒளிர்ந்திடும் எங்கள் ஆசிரியர்
வரதராஜா,
பொன்விழாக் கண்டு பூரித்து
நல்மனிதராய் அவனியில் வாழ்கிறார்
நல்லன தந்து தீயன அகற்றி
கற்பன கற்பித்து கல்லாதன
யாவும் தெரிவித்து ஏந்தாவிளக்காய்
எம்முன் சுடர்கிறார்.

ஷஷஎக்ஸ்பிறஸா" கல்வி ஒழுக்கம்
நற்பண்பு என யாவற்றையும்
எமக்களிக்கின்றார்

வானத்துச் சந்திரனாய் குளிர்மையைத் தந்தும்
சுடு சூரியனாய் தீயன எரித்தும்
கருமுகிலாய் அறிவினை நல்கியும்
இடிமின்னலாய் களைவன களைந்தும்
யாவுமாய் எமக்குத் திகழ்கிறார்

மாணவரின் நல்லாசானே வாழி – அவனியில்
நல் மாந்தரை உருவாக்கி வாழி
நந்தா விளக்காய் வாழி – என்றும்
வரத ராஜனாய் வாழி
பொன்விழாக்கண்டவரே வாழி இன்னும்
நூற்றாண்டு கண்டே வாழி
கல்விப் பணிபுரிந்து வாழி என்றும் சுகத்துடனே
யாவையும் பெற்று என்றென்றும் வாழி



நன்றி

செ.பிரதீபன்
தரம் 11^



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துப் பாமாலை

எக்ஸ்பிறஸ் என்னும் நல்லறம் தன்னில்
இணையில்லா ஒளியாய் இருசுடர் விளக்காய்

பல்லோர் போற்ற பாரெங்கும் ஏற்ற
படரும் கொடியின் கொழு கொம்பெனவே

எண்ணும் எழுத்துமாய் சுவைபட இணைந்தே
கண்ணும் கருத்துமாய் சுகத்தில் மூழ்கிட

எக்ஸ்பிறஸில் நல்லொழுக்க சேவையாற்றி
வளம் பெற்று வாழும் எங்கள் அதிபதியே!

மங்கல நாளில் மாண்புகள் காண
மனமகிழ்ந்து நிற்கும் மாசிலா மணியே!

பொங்கிடும் அன்பினில் பூரித்து மகிழ்ந்தே
பொக்கிசம் எனப் போற்றி வந்தவரே

பாலும் தேனும் பருகிடும் சுவையமுதாய்
நாளும் இணைந்து நலம்பல பெற்றுயர்ந்தே

வாழும் வகையிதென்று வையகத்தோர் வியந்திடவே
பல்லாண்டு பல்லாண்டு பார்போற்ற வாழி! வாழி!



**நன்றி**

*நிக்ஷாலினி சாந்திக்குமார்*
தரம் 11B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் புனல்

கல்விக்கென உதித்த செந்தாமரையே! உனக்குள் ஒரு சூரியன் கல்விக்கடல் அத்தகைய இந்த சூரியனின் பிரகாசமான ஒளியை முப்பத்திரண்டு வருடங்கள் புகட்டிய தங்கத் தாமரையே உனக்குள் ஒரு கட்டுப்பாட்டுக்கோட்டை அதனுள் ஒரு கல்விக் கோட்டை அதனுள் இனிய மாணவ குலாங்களை இணைத்துச் சூரியனின் அறிவுக் கடலுக்குள் எம்மை அழைத்துச் சென்ற கல்விப் புனலே

எம்மனதில் நல்லொளி எனும் கோட்டைக் கட்டியெழுப்பிய ஈழ நாட்டுச் செந்தழிழனே உன்னைப் போன்றஇளந்தளபதி ஒருவன் நாடாளும் ஜனாதிபதியாக இருந்தால் கல்விக்கு ஏது பஞ்சம். இந்த நாடே கல்வி எனும் ஆழ்கடலில் இளஞ்சிறார்கள் நாம் மூழ்கிவிடுவோம் அல்லவா?

உன்னைப் பத்து மாதம் சுமந்து பெற்றவள் தாயல்ல நாம் அனைவரும் வணங்க வேண்டிய ஒரு தெய்வம்உன்னைப் போன்று ஒரு அணையாத தீபமானது இருந்தால் மாணவச் செல்வங்கள் அனைத்தும் பிரகாசம் எனும் ஒளியில் குதூகலிப்பதைக் காணலாம். எம்மைப் போல சிலருக்கு உம்மைப் போன்ற கல்வி நிழலானது எம்மீது படியுமாயின் நாங்கள் அனைவரும் அழியாத இளம்புயல்களாக மாறி விடுவோம். இன்றைய இளஞ்சிறார்களை நாளைய நாட்டின் தளபதியாக்கும் மாணிக்கச்சுடரே எமது கல்லூரியின் அதிபராவார்.



நன்றி

ஆக்கம்
நா.ஷர்மிலன்
தரம் 10A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் அதிபர் வாழ்க

நல்லெழில் பொங்கும் எம் அதிபர்
பிறந்தார் நன் நாளிலே
1973ல் கல்வியை எல்லோர்க்கும்
அளித்திட நிறுவினார் கல்வி நிறுவனத்தை
தொல்லைகள் நீக்கி இன்பத்தை
ஊட்டிட தாங்கினார் தன் மனத்தை
நல்லருள் பெற்று வாழ்ந்திட நாடுவோம்
அவர் நல்ல அருளை
இன்னும் பல்லாண்டு வாழ்ந்திட
வேண்டுவோம் கற்பக விநாயகன் அருளை

நன்றி

கு. சரவணன்
தரம் 10A

## எம் அதிபர் வாழ்க

உலகம் சுழல்வது புவியீர்ப்பில் நாமே
உலகில் சுழன்றே வாழ்வது குருவே
உணர்ப்பில் இதை உணராமனங்கள் என்றோ ஒருநாள் - இதை
உணர்ந்தே தீரும் என்பது நியதி குருவே
உந்தன் நினைவின்றி வாழ்பவன் எவனும் இவ்
உலகில் வாழ்வதென்பதோ உண்மையில் முடியாது

நன்றி

செல்வி கா.பிரியங்கரி
தரம் 6A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவையினூடே சேர்ந்த வயசில்
பாரில் வாழப் பல்லாண்டு வாழ்த்து



# சுப்பீரியர் போட்டோஸ்ரார்



இருபாலைச்சந்தி, கோப்பாய்.



தேசம் செழிக்க மாணவம் சிரிக்க
சேவையின் தேவையே சிறப்புடன் வாழி



# பஷன் ஹவுஸ்



கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழாக் காணும்
# எம் அதிபருக்கு

யாழ் நகரில் உதித்த
யாழின் புகழ் பூத்த நிறுவனமாம்
எங்கள் எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டின்
எண்ணிலா முழு நிலவாம்
எங்கள் அதிபர் அவரே
எங்கள் பொன்விழா நாயகன்
கண்டிப்பும் கண்ணியமும்
கட்டுப்பாடும் நல்ஒழுக்கமும் - அவர்
கண்ணின் மணிகள்
சோதனைகள், வேதனைகள் பல கண்டும்
சோர்வடையா எம் அதிபர்
அன்பிற்கே இலக்கணமாய்
பண்பிற்கோர் மாணிக்கமாய் திகழும்
எங்கள் பொன்விழா நாயகன்
என்றும் சீரும் சிறப்பும் பெற்று
பல்லாண்டு காலம் பார்புகழ
பல வெற்றிகளை தன்பால் கொண்டு
என்றும் சிறப்புடன் வாழ
எங்கள் கற்பக விநாயகனை வேண்டி நிற்கிறோம்



நன்றி

ஆக்கம்
யோகஷிகா சாந்திராஜ்
தரம் 11^A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்த நாள் நல்வாழ்த்து

அகிலத்து உயிர்களெல்லாம்
அரசென போற்றத்தக்க
அருஞ்செல்வமாம் கல்வியை
அன்புடன் கற்பித்து
அறிவுடைய மாணவர்களை
ஆக்கித் தந்து - இவ்
அவனிக்குப் பெருமை சேர்க்கும்
அரும்பணி ஆற்றிவரும்
அதிபர் அவர்களின் புகழும்
சிறப்பும் அழியாது இருக்கவேண்டும்

கல்விதனை கற்கும் மாணவரிடம்
கண்டிப்புடனும் பாசத்துடனும் நடந்து
கல்வித் தேவைகளை அறிந்து
கருமமே கண்ணாக அவற்றை நிறைவேற்றி
கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களிடமும்
அன்பாய் இருந்து
கட்டுப்பாடான வழிகாட்டலிலும்
கண்டிப்பான வழிநடத்தலிலும்
ஆயிரம் ஆயிரம் அறிவாளிகளை
ஆக்கித்தந்த அதிபர் அவர்கள் சேவை
அழியாது இருக்க வேண்டும்

ஐம்பது வயதை எட்டிய
அதிபர் அவர்களுக்கு தங்கள்
அன்பான மாணவரது
பிறந்தநாள் நல் வாழ்த்துக்கள்



நன்றி

பா.டிபர்சன்
தரம் 11B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாந்தி தந்தருள்வாய் குருவே!

ஆதவனைக் கண்டதும்
முகம் மலரும் தாமரை போல் குருவே
ஆசானே உன்னிடம் கற்றிட
அகம் மகிழுமே. எந்நாளும்

சோதனைகளே சொந்தமாகி
சோர்வடையும் போதெல்லாம் - குருவே
போதனைகளே நல்ல மருந்தாகி
புத்துணர்வு ஊட்டுகின்றதே

வேதனைகள் யாவும் விரைவிலே
விலகிடும் வண்ணம் குருவே
சாதனை செய்ய விழைகிறேன்
சாந்தி தந்தருள்வாய்.



**நன்றி**

ஆக்கம்
பிரகாஷிகா காண்டீபன்
8'B' (2005)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



க.மனோகரன்
முகாமையாளர்
இலங்கை வங்கி
மாங்குளம்.

கடந்த 25 வருடங்களாக என்னுடன் சிறந்த
நண்பராக விளங்கும் விழா நாயகன் திரு.த.வரதராஜா
சிறு வயதிலேயே கணித பாடத்தில்
சிறந்த விற்பன்னராக திகழ்ந்தார். தான் பெற்ற
அறிவை மற்றோருக்கும் வழங்கி கணித பாட
போதித்தலில் தனக்கென ஒரு தனியிடத்தை தக்க
வைத்திருக்கின்றார். அது மட்டுமன்றி சிறிய
வயதிலேயே ஒரு தனியார் கல்வி நிலையத்தை
ஆரம்பித்துப் பல இன்னல்கள்
மத்தியிலும் திறம்பட நிர்வகித்து யாழ்
நகரிலேயே ஒரு பிரபல பாடசாலை போல்
சிறந்த ஆளுமையுடன் நடாத்தி வருகின்றார்
இந்த 50வது பிறந்த தினத்தில்
மேலும் பல சீர்களுடன் நீண்ட காலம் வாழ்ந்து
கல்வித் தாய்க்கு மேலும் மேலும் சேவையாற்ற
வேண்டும் என வாழ்த்தி நிற்கின்றேன்.



நன்றி

நண்பன்
க.மனோகரன் (ஒப்பம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு.வ.சிவசெல்வம்
ரொறன்ரோ
கனடா

# பொன்விழா ஆண்டு பிறந்தநாள் வாழ்த்து

01.03.2005 அன்று பொன்விழா ஆண்டாகப் பிறந்தநாள் காணும் அன்பு நண்பன் வரதராஜா அவர்கள் இன்றுபோல் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்க வாழ்க என்று வாயார மனதார வாழ்த்துகின்றேன்.

1978ஆம் ஆண்டில் இரசாயனவியல் கற்பிக்கும் ஒரு ஆசிரியனாக இருந்த என்னையும் வரதராஜா என்கிற வரதனையும் அறிமுகப்படுத்தியது எகஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் என்ற கல்வி நிறுவனமே.

கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாகப் பல்லாயிரக் கணக்கான தமிழ் மாணவர்களுக்கு விதியும் விதிவிலக்கும் தெரிந்து கற்பிக்கும் ஒரு நல்லாசிரியனாகக் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காத்துத் தனக்கெனத் தனி முத்திரை பதித்து இன்றும் சொந்த மண்ணில் நின்று சேவை புரியும் அன்பு நண்பனுக்கு உளமார்ந்த பிறந்தநாள் வாழ்த்துக்கள்.

தமிழர் போராட்டம் உக்கிரமடைந்த காலகட்டங்களிலெல்லாம் தமிழர்களின் உயிர்களுக்கு உத்தரவாதம் இல்லாமல்ப் போயிருந்தது. உயிருக்குப்பாதுகாப்பில்லாத நிலைமைகள் ஆரம்பத்தில் சிங்கள இராணுவத்தினாலும் பின்னர் இந்திய இராணுவத்தினாலும் ஏற்படுத்தப்பட்டகாலகட்டங்களின் போதும் இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்தின் பின்னர் அது சிங்கள இராணுவத்தினால் மீண்டும் தோற்றுவிக்கப்பட்ட போதும் எல்லாக்காலகட்டங்களிலும் நினைத்தால் நினைத்தவுடன் எங்காவது மேலைநாடு ஒன்றிற்குச்சென்று குடியேற வசதிகளிருந்தும் குடியேறாமல் சொந்தமண்ணில் நின்று சேவைபுரியும் மனப்பக்குவமும் நெஞ்சுரமும் வல்லமையும் கொண்ட நாகரீகமும் நாணயமும் மிக்க நல்லதொரு நண்பனின் பொன்விழா ஆண்டுப் பிறந்தநாளில் பிறந்தமண்ணில் அவரது சேவை இன்னும் பல்லாண்டுகள் தொடரவும் அவரது அயராத உழைப்பினால் உயர்ந்து நிற்கும் எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் பலதுறைகளிலும் மேலும் அரிய பல சாதனைகளைப்படைக்கவும் எல்லாம்வல்ல இறைவன் அருள் புரியவேண்டும் என்று வேண்டி வணங்கி வாழ்த்துகிறேன்.


நன்றி

அன்புடன்
சிவசெல்வம் வல்லிபுரம்
(ஒப்பம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வை.க.தவமணிதாசன்
விஞ்ஞான ஆசிரியர்
கொழும்பு இந்துக்கல்லூரி.

# நட்புக்கு நயத்தன்

இருபாலை இயற்றமிழ் மண்ணின்
இமயம் "எக்ஸ்பிரஸ்" நிறுவனம்
தருவளம் கல்வி விழுமியம்
தகுதித் தரங்கணிப்புப் பெரு
விருட்சமாய் நிழல் வழங்கும்
வித்தகம் வளர்ந்த மாண்பு.

தொட்டெனத்தூறும் ஊற்று
தொடர்கல்வி ஒழுக்கம் மேவிப்
பட்டென மிளிரும் கல்விப் பசுமை
பாருக்கே தலையாம் பாங்கில்
எட்டிடாதோ கல்வி எனும் ஏக்கம்
ஈங்கிலா வெற்றிவாண்மை

உற்றது "எக்ஸ்பிரஸ் இன்ஸ்ரிரியூட்
உயர்ந்தது வரத ராஜா எனும்
ஊக்கமும் உழைப்பின் அதிபர்
பயன் தரு கற்பகமாம் பணியில்
பாருக்கே உதவும் செழுமை
நயந்தது, வியப்புற்றாய் நீடுவாழி!

பொன்விழாக் காணும் புரவலன்
புனிதம் கல்விப் புகட்டலில்
இன்னமும் புதுமை இயற்றலில்
எதிலுமே முயற்சி மேலோன்
அன்பன் நட்புக்கு நயத்தன்
இடுக்கண் களைவதும் வாழி நீடு!

ஐம்பதாம் அகவை நிறைவு
ஆற்றிய கல்விச் சேவை
நெம்பென உயர்த்தும் சிறாரின்

நிறைவுறும் வாழ்வு சிறக்க
நம்பிக்கை நட்சத்திரமாய்
நானிலம் போற்ற வாழி!


நன்றி

நண்பன்
வை.க.தவமணிதாசன் (ஒப்பம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ச.வாமதேவன் (அதிபர்)
யாழ் கோண்டாவில் இராமகிருஷ்ண
மகா வித்தியாலயம்.

இன்று பொன்விழாக் காணும் இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் அதிபரும், புகழ் பூத்த கணித ஆசானும், எனது நண்பனும் ஆகிய திரு.த.வரதராஜாவை 1978ஆம் ஆண்டு பலாலி ஆசிரிய கலாசாலையில் புதிதாக நியமனம் கிடைத்த ஆசிரியர்களுக்கான குறுகிய காலப் பயிற்சியின் போது சந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. இவரின் கணித பாடம் கற்பிக்கும் ஆற்றலைக் கண்டு நான் வியந்ததுண்டு. மாணவர்களுக்கு மிக இலகுவாக விளங்கக் கூடிய வகையில் கற்பிக்கும் திறன் கொண்டவர். இவரின் கல்வி நிறுவனம் கடந்த 32 வருடங்களாக மாணவ உலகிற்குச் சிறந்த கல்வியினை வழங்கி வருகின்றது. யாழ்ப்பாணத்தில் மிகவும் கட்டுப்பாடும், மாணவர் ஒழுக்கமும் உடைய கல்வி நிறுவனத்தில் இவரின் கல்வி நிறுவனமும் ஒன்றாகும். இவர் மணி விழா, பவள விழா, நூற்றாண்டு விழாக்களைக் கூடக் கொண்டாட வேண்டும் என மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றேன். அவர் தனது குடும்பத் துணைவியுடன் நன்மக்களுடன் நலமுடன் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

நன்றி

நண்பன்
ச.வாமதேவன் (ஒப்பம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வே.கா.கணபதிப்பிள்ளை
முதுநிலை விரிவுரையாளர்
ஆசிரிய கலாசாலை
கோப்பாய்.

அன்பர் தம்பிப்பிள்ளை வரதராஜா அவர்கள் அகவை 50 அடைகின்றார் என்கின்ற செய்தி அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடையும் வேளையில் அவரின் நீண்ட கால நண்பன் என்ற வகையில் இதயபூர்வமான எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன், அவரின் ஆசிரியப் பணி வாயிலாக மாணவ சமுதாயம் மேன்மேலும் நல்ல பயன்களைப் பெற்றிட அவருக்கு இறையருள் வேண்டி நிற்கின்றேன். அன்பர் தம்பிப்பிள்ளை வரதராஜா வணிகப் போட்டி நிறைந்த இன்றைய சூழலில், தன்னம்பிக்கையுடன் 30 ஆண்டுகளுக்கு மேலாக மாணவர் கட்டுப்பாடு, ஒழுக்கத்திற்கு எடுத்துக்காட்டான ஓர் கல்வி நிறுவனத்தை அதன் பொறுப்பாளராக இருந்து நடத்தி வருகின்றார். இக்கல்வி நிறுவனத்தில் இளமையும், அனுபவமும் வாய்ந்த ஆசிரியர் குழுவை கடமைக்கு அமர்த்தி பெற்றோர்கள் மத்தியில் பெரும் பாராட்டையும், வரவேற்பையும் பெற்று, பாடசாலைக் கல்வியிலிருந்து விடுபட்டு முன்னேறத் துடித்து நின்ற பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் சிந்தனைகளைக் கிளறி, சீர்மியப்படுத்தி அவர்களை உயர்நிலை அடையச் செய்த பெருமை இவருக்குரியதாகும். புதிய கல்விச் சீர்திருத்தத்தின் பிரகாரம் நவீன கல்வித் தொழில்நுட்ப பாடத்தை பாடசாலைகளில் பெற்றுக் கொள்ள முடியாத மாணவருக்கு உதவும் வகையில் தனது கல்வி நிறுவனத்தில் கணணிக் கல்வியை ஆரம்பித்து நடைமுறைப்படுத்தி வருகின்றார்.

வாழ்க்கையின் வெற்றி என்பது ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சரியான தீர்மானம் எடுத்தலும், அதனை அமுல்படுத்துவதுமாகும். தீர்மானம் என்பது, ஓர் எளிமையான வேலை போல் தோன்றினாலும், அது பல்வேறு பக்கப் பார்வைகளைக் கொண்ட சிக்கலான ஓர் உளவியல் செயற்பாடு என்பதை ஆழமாக உற்று நோக்கிப் பார்க்கும் போது விளங்கிக் கொள்ள முடியும். அது கணித செயற்பாடு போன்ற ஓர் அறிவுசார் செயல் மட்டுமல்ல, அதன் பின்னணியாக அமையும் சமூக, பண்பாட்டு, மனஎழுச்சி போன்ற பல்வேறு உளவிருத்தி செயற்பாடுகளை உள்ளடக்கியதாகும். சுருங்கக் கூறின் சரியான தீர்மானம் எடுத்தல், பூரண தனியாள் விருத்தியின் வெளிப்பாடாகும். அன்பர் வரதன் தான் பணியாற்றிய கல்விக் கூடங்களில் மாணவர்களை நல்வழிப்படுத்துவதற்காக எடுத்துக் கொண்ட தீர்மானங்கள் அதனை அமுல்படுத்தும் போது கண்டு கொண்ட முரண்பாடுகள், அவரை மேலும் உற்சாகப்படுத்துபவையாக இருந்தன

“காய்த்த மரம் பல கல்லெறிகளை
சந்திப்பது நியதியே”

எனவே வரதன் அவர்கள் நெறிபிறழாது, இலக்குத் தவறாது, எதையும் தாங்கும் துணிவோடு தன்னை நாடி வரும் மாணவ சமுதாயத்திற்குச் சீரிய பணியாற்றிட வேண்டும் என்றும், தனது துணைவியார், பிள்ளை சகிதம் சகல வளங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வேண்டும் என்றும் வாழ்த்துகின்றேன்.

வே.கா.கணபதிப்பிள்ளை (ஒப்பம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வ.செ.மகேந்திரன்
விளையாட்டுத்துறை முதல்வர்,
யாழ் மத்திய கல்லூரி.

அன்பின் நண்பா,

ஆசிரியத் தோழனென்பது கிடைத்தற்கரியதொன்று. இது எல்லோருக்கும் கிடைப்பதில்லை. அதிலும் ஆசிரியத் தொழில் இவருக்கு பொருத்தமானதொன்று எனக் கண்டவர்கள் சொல்லுமளவிற்கு தனது கற்பித்தல் வாழ்வில் வாழ்ந்து காட்டிக் கொண்டு வருகிறார். இன்று எமது 50வது வயதிலும் எதுவித சலிப்புமின்றி மிடுக்குடன் வாழ்ந்து காட்டிக் கொண்டு வருகிறார் நண்பன் திரு.வரதராஜன் ஆசிரியர் அவர்கள்.

எமது யாழ் மத்திய கல்லூரி மாணவர்களை சமூகத்துடன் இணைத்து விடுவதென்பது இலேசான காரியமில்லை. ஏனெனில் எமது பாடசாலை யாழ்ப்பாணத்தின் மத்தியில் காணப்படுவதாலும் சகல போக்குவரத்து வசதிகளும் கொண்ட இட மாதலினால் பல இடங்களிலிருந்தும் பல்வேறு மன எழுச்சியுடன் ஒன்றிணையும் மாணவர்களை வழிப்படுத்துதல் என்பது மிகக் கடினமான பொறுப்பு. ஆனால் நண்பனைப் பொறுத்த வரையில் இது மிகவும் இலகுவான காரியம். ஏனெனில் இவருடன் அப்பண்புகள் ஊறிப் போனவை. ஆசிரியர்களாகிய நாம் கூட இவரிடமிருந்து சில உத்திகளையும், வழி முறைகளையும் கற்றோமென்பதை மறுப்பதற்கில்லை.

நான் மத்திய கல்லூரியின் விளையாட்டுத்துறை முதல்வராக பொறுப்பாசியராக கடமையாற்றி வரும் இவ்வேளையில் மாணவ தலைவர்களுக்குப் பொறுப்பாக இருந்து பாடசாலை ஒழுக்கங்களிற்கு பொறுப்பாக இருந்த எனது நண்பனின் கண்டிப்பான போக்கு, ஒழுங்கு முறை எனது விளையாட்டுத்துறைக்கு பெரிதும் உதவியளித்து வருகிறது. மேலும் எமது கல்லூரி அமைந்த சூழலும், காலமும், இவருக்கு சவலாக அமைந்தாலும் சவாலை சரி நிகராக ஏற்றுச் சாதனை படைத்த பெருமையும் அவர்களையே சாரும்.

மேலும் இவர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றை தமது அணிகலன்களாக கொண்டு சிறந்த சேவை புரிந்து வருகிறார். எமது கல்லூரியிலும் சரி, தனது நிறுவனத்திலும் சரி எத்தனையோ மாணவர்களை சமூகத்தில் செயல் வீரர்களாக மாற்றி வருகின்றார். மேலும் எந்தச் செயலையும் உடனுக்குடன் செய்ய வேண்டும் என்ற வேகம் கொண்டவர். நான் சில நேரத்தில் எனது சில வேலைகளை இப்படிச் செய்ய வேண்டும் என்று சொன்னால் போதும், அடுத்த நாள் அல்லது உடனேயே அவ்வேலை செய்ய வேண்டும் என்று அச்செயல் உடனே முடிந்து விடும். அன்பான உள்ளமும், கண்டிப்பான செயலையும் கொண்டவர். பார்த்தால் கண்டிப்பானவர் போல் தோற்றமளித்தாலும் ஏழ்மையான மனம் கொண்டவர். கஷ்டப்பட்டவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற மனம் கொண்டவர். இவ்வாறு எனது நண்பனைப் பற்றி பல கூறிக் கொண்டே போகலாம்.

மேலும் எமது கல்லூரிக்கும், மாணவ சமூத்திற்கும் அவர் செய்த அளப்பரிய சேவையை எவரும் எளிதில் மறந்துவிட முடியாது. இவரது சேவை தொடர்ந்து நடைபெற்று வரவேண்டும் என்றும், நலமுடன் வாழ இறைவனைப் பிரார்த்திப்போமாக.

அன்புள்ள நண்பன்
வ.செ.மகேந்திரன். (ஒப்பம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தி.யேசுதாசன்
உதவி முகாமையாளர்
இலங்கை வங்கி தலைமைக் காரியாலயம்
கொழும்பு – 01

வரதர் பொன்விழா மலரில் எனது ஆசிகளும் இடம் பெறுவதில் சிறியேனாகிய நானும் பெருமகிழ்வடைகின்றேன். மூன்று, தசாப்தங்களுக்கு முன்பு "யாழ்ப்பாணத்தின் குட்டிப் பல்கலைக்கழகம்" எனப்பட்ட யாழ் தொழில்நுட்பக் கல்லூரியில் பகிடிவதைக்கு ஆளாகி அதனால் ஏற்பட்ட ஆழமான நட்பை இன்றும் பசுமையுடன் மீட்டிப் பார்க்கின்றேன். முப்பது வருடகால நட்பு மூச்சு நின்றாலும், முழு மூச்சுடன் அடுத்த பிறவியிலும் தொடர வேண்டும் என்ற பேராசையும் என்னிடம் குடி கொண்டுள்ளது.

"யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்ற பொன்மொழிக்கு அமைய தான் பெற்ற பெறுதற்கரிய அருஞ் செல்வமான கல்விச் செல்வத்தை ஆசிரியனாக பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் போதிப்பதோடு மட்டும் நின்றுவிடாது தானே ஒரு தனியார் கல்வி நிறுவனத்தை உருவாக்கி அதன் மூலமும் கல்விச் செல்வத்தை மாணவ மணிகளுக்கு அள்ளி வழங்கி வருகின்றார் வரதர் என்ற வள்ளலார். எத்தனையோ கல்விமான்களையும், நற்பிரஜைகளையும் உருவாக்கி பெரு வெற்றி கண்டவர் எமது வரதர் அவர்கள். அவரிடம் பயின்ற மாணவமணிகள் பார் முழுதும் பரந்துபட்டு வாழ்வதை பார்த்து மகிழ்கின்றோம். நாம் இன்று அவர் உருவாக்கிய தனியார் கல்வி நிறுவனம் வடமாகாணத்திலேயே முதன்மைக் கல்வி நிலையமாகத் திகழ்கின்றது. தனியார் கல்வி நிறுவனத்திலே இல்ல விளையாட்டுப் போட்டிகளை ஆண்டு தோறும் நடாத்திய பெருமை வரதர் அவர்களையே சாரும். தன்னிடம் பயின்ற மாணவ மணிகளுக்கு கல்வியை மட்டுமல்லாது சிறந்த ஒழுக்கக் கட்டுப்பாடுகளையும் போதித்து ஏனைய மாணவர்களுக்கு முன்னோடியாகத் திகழ வைத்தவர் வரதர் என்றால் அது மிகையாகாது.

பொது வாழ்வில் சமூக சேவையில் அதிகம் ஈடுபாடுடைய வரதர் அவர்களை ஊர் மக்கள் மட்டுமல்ல அனைத்து மக்களும் அன்று முதல் இன்று வரை அதிக கௌரவத்துடன் மதித்து நடப்பது வெள்ளிடைமலை. நண்பர்கள், உறவினர்கள், அயலவர்கள் என்று யார் வீட்டில் எது நடந்தாலும் அதில் கலந்து கொள்வதோடு மட்டும் நின்றுவிடாது அவற்றைச் சிறப்பாக முன்னின்று நடாத்தி முடிப்பதிலும் வரதருக்கு நிகர் வரதரே.

சிறுவயதிலேயே தனது பாசமிகு தந்தையை இழந்தாலும் மனம் தளராது தனது கல்வியைத் தொடர்ந்தது மட்டுமல்லாமல் தாய்க்கு பாசமிகு மகனாகவும், சகோதரங்களுக்கு பாசமிகு தந்தையாகவும் இருந்து ஆலமரம் போல் அரவணைத்து, தூணாக துணை நின்று தொடர் பணி செய்தார். அவர்களுக்கு வேண்டியவற்றை வேளா வேளைக்கு வழங்கி சகலரையும் நல்ல நிலைக்கு உயர்த்தியது அவரது ஐம்பது வருட வாழ்வில் அரியதொரு சாதனையென்பது அடியேனின் முடிவு.

அவர் தன் துணைவியாரோடும், அன்பு மகளோடும் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து தொடர்ந்து கல்வித் தொண்டாற்றி மகிழ்ந்திட வேண்டும், மன நிறைவுடன் வாழவேண்டும், பொன் விழாவென்ன, வைர விழாவென்ன, நூற்றாண்டு விழாவே கொண்டாட வேண்டுமென்று வாயார வாழ்த்தி எல்லாம் வல்ல இறையருள் என்றும் அவருடன் நிலைத்திருக்க மனதார வேண்டி நிற்கும்.

நண்பன்
ஜேசுதாசன் (ஒப்பம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✍ பொன்விழா ஆண்டிதன் புதிய சகாப்தமே வாழிய என்றும்

Nandas Creations

Innovating Solution In Graphics

# 450, K.K.S. Road, Jaffna. Tele. 077 7703239.

✍ செம்மண் நிலத்தால் சிவந்து மழைநீர்
எம் மண் உயர என்றும் நீ வாழி

பவேசர்

பந்தல்

சேவை



G.P.S றோட் கல்வியங்காடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



L.ஓங்காரமூர்த்தி
பிரதி அதிபர்,
யாழ்.இந்துக்கல்லூரி.

இன்றைய யாழ்ப்பாணச் சமூகத்தில் பெற்றோருடைய இலட்சியமாக இருப்பது தமது பிள்ளைகளை ஏதாவது ஒரு கல்வித் தகைமையைப் பெறுவதற்குத் தயார்ப்படுத்துவது மட்டுமே. காரணம் ஏதாவது ஒரு அரச உத்தியோகத்துக்குள் தமது பிள்ளைகளை இணைத்து விட வேண்டும் என்ற அவாவே. எனவே கல்வி ஒரு போட்டிக் களமாக மாறிவிட மாணவர்கள் தங்களது பருவத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய பொருத்தமான பொழுது போக்குகளையே அன்றி மகிழ்வு தரும் விளையாட்டுக்களையோ அனுபவிக்க முடியாத பாவிகளாக மாறி இடை மாறாத பாடநூல் திணித்தலுக்குட்படும் நிலைமையே காணப்படுகிறது.

இலங்கை அரசின் கல்வி நோக்கங்கள் எங்கோ தொலை தூரத்திற்கு வீசப்பட்டு, மாணவர்களது உடல், உள நலன்கள் பேணப்படாது வெறும் கற்றல் இயந்திரங்களாக மாறி பரீட்சையை மட்டும் எதிர்கொள்ளும் ஐந்துக்களாக மதிக்கப்படும் நிலை. இந்த நிலையை நோக்கும் போது நண்பர் திரு.தம்பிப்பிள்ளை வரதராஜா அவர்கள் தனது நீண்ட கல்வி அனுபவத்தை தன்னால் ஆரம்பிக்கப்பட்ட கல்வி நிறுவனமான எக்ஸ்பிறஸ் கல்வி நிறுவனத்தினூடாக பெருமளவுக்கு சீர் செய்துள்ளார் என்றே கூறவேண்டும். தனது நிறுவனத்தினூடாக கற்றல் செயற்பாடுகளில் மட்டுமன்றி எதிர்கால நாட்டிற்குத் தேவையான உடல், உள, நலன் மிக்க மாணவர்களை தயார் செய்வதில் தனது கணிசமான பங்களிப்பினை வழங்கியுள்ளார் என்றே கூறவேண்டும்.

தான் எடுத்துக் கொண்ட எந்தப் பொறுப்பினையும் எந்த இடையூறு வந்த போதும் நிதானமாக, வலுவாக கடைப்பிடித்து வெற்றி பெறும் ஆற்றலைக் கொண்டவர் வரதராஜா. பொன்விழாவினைக் காணும் திரு.வரதராஜா இன்னும் பல ஆண்டுகள் தனது கல்விப் பணியையும் மேற்கொண்டு சிறப்புற்று வாழ எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.




நண்பன்

L.ஓங்காரமூர்த்தி (ஒப்பம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆ.தங்கராஜா (விலங்கியல் ஆசிரியர்)
இசப்பத்தானைக் கல்லூரி
கொழும்பு – 05

## வாழ்த்துரை

01.03.2005இல் தனது 50வது
அகவையை நிறைவு செய்யும்
எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் அதிபரும்
எனது நண்பனும் ஆகிய வரதராஜா
அவர்கள் மேலும் நீடூழி வாழ்க
வென வாழ்த்துகின்றேன்
மேலும் அவரது கல்விப் பணியும்
சிறந்த நிர்வாகத் திறனும் யாழ் மாவட்டத்தின்
கல்வி வளர்ச்சியில் குறிப்பிடக்
கூடியளவு இடம் பிடித்
துள்ளதுடன் மேலும் பல அகவைக
ளைக் கொண்டாடி அவரது
சேவை மேலும் நீடிக்க வேண்டும்
என என் மனமார்ந்த வாழ்த்துக்
களை இச்சந்தர்ப்பத்தில் வழங்
குவதுடன் இச்சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு
பெருமகிழ்ச்சியடைகின்றேன்

**நன்றி**


இவ்வண்ணம்
ஆசிரியர் ஆ.தங்கராஜா
(முன்னாள் யாழ் மாவட்ட விலங்கியல் ஆசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மொழி மூல ஆசிரியர்களில் மகரகமவிலுள்ள தேசிய கல்வி நிறுவகத்தில் 2000ம் ஆண்டு நடை பெற்ற "மாணவர்களுக்கான வாழிகாட்டலிலும் ஆலோசனை கூறலும்" என்ற தலைப்பில் இருவாரகால பயிற்சியை முடித்து வெளியேறிய ஆலோசகர்களுடனும் விரிவுரையாளர்களுடனும்.





சுவிற்சலாந்து சியோன் *(SION)* மாநிலத்திலுள்ள ஒரு ஆரம்பப் பாடசாலையின் வகுப்பறையின் அமைவுகளை அவதானித்து அங்குள்ள கல்வி முறைகள் பற்றி அவ்வகுப்பறையில் அவ்வகுப்பின் ஆசிரியருடன் கலந்துரையாடிய போது *(2002 - sept)*

சுவிற்சலாந்து லவுஷான் *(Laushan)* மாநிலத்தில் உலகத் தமிழர் ஒருங்கிணைப்புகுழு கல்வி சேவையினரால் நடாத்தப்பட்ட பிரஞ்சு பேசும் தமிழ் மாணவர்களுக்கான தடகளப்போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து வெற்றி பெற்ற சிறார்களுக்கு பரிசில் வழங்கிய போது [2002 செப்ரம்பர்]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✍ சுனாமி தொடாத சூரியக் கதிரே வாழி நீடு


# டனி கூல் பார்



இருபாலைச்சந்தி, கோப்பாய்.

✍ அறுகின் வேராய் ஆலின் விழுதாய்
அறிவின் ஏணி வாழியவே நீடு

# யூனியன் சேவிஸ் ரேசன்



இருபாலைச்சந்தி,, கோப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✍ கணிதச் சுடரின் இதயக்கனிக்கு
இன்று போல் என்றும் எமது இனிய வாழ்த்துக்கள்



# நியூ சயன்ஸ் ஹோல்

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்

✍ கல்விக் கடலின் கருங்கல் அணையே
கடுமழை பெய்து கரைவது உண்டோ

# புதிய உயர் கல்லூரி





ஆரியகுளம் சந்தி,, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



V.Tராஜேந்திரா ஜே.பி.
உதவிமுகாமையாளர்
இலங்கை வங்கி கணனி பிரிவு
தலைமைக் காரியாலயம்
கொழும்பு – 01

வரதன் ஆசிரியரின் அகவை ஐம்பதை சிறப்பிக்கும் முகமாக வெளியாகும் சஞ்சிகைக்கு என் சிந்தனையிலிருந்து உதித்தவற்றை எழுத்துருவாகத் தருவதில் மகிழ்ச்சியடைகின்றேன். இந்நூலில் தங்கள் கருத்துக்களை தெரிவிப்பவர்களின் நான் மிக நீண்ட காலமாக வரதருடன் பழகியவன் என கூறுவது பொருத்தமானதாக இருக்கும்.

நாம் இருவரும் ஒரே காலப் பகுதியில் பிறந்து கல்வி கற்று கணித பாடத்தினை ஒரே காலப் பகுதியிலிருந்து கற்பிக்க ஆரம்பித்து இன்று வரை "கணிதம்" கற்பிப்பவர்கள் எனக் கூறிக் கொள்வதில் மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகின்றேன்.

கிட்டத்தட்ட முப்பத்துமூன்று வருடங்களுக்கு மேலாக கற்பித்து வரும் நாம் இரு தலை முறைகளின் ஆசிரியர்கள் எனக் கூறுவது பொருத்தமானதாகும். "வரதன்" என்றால் கண்டிப்பானவர் என்று தான் சட்டென எல்லோரும் கூறுவார்கள். கண்டிப்பு இருக்கும் அதே வேளையில் "கனிவும்" உண்டு.

எந்த ஒரு விடயத்தையும், செயற்பாட்டையும் குறித்த நேரத்தில் சிறப்பாக நடத்தி முடிக்கும் திறமையும் எமக்காக ஒரு விடயத்தை செய்யும்படி கூறினால் அதை தனது விடயமாக கருத்திற் கொண்டு செய்து முடிக்கும் ஆற்றல் வரதன் ஆசிரியரிடம் காணப்படுகின்ற குணாதிசயங்களில் ஒன்று. பிரபல்ய மாணவர்களுக்கும், வளர்ந்து வருபவர்களுக்கும் எந்தத் துணையென்றாலும் எதிரிகள் இருக்கத்தான் செய்கிறார்கள். காய்க்கின்ற மரத்திற்கு கல்லெறிகள் விழும் என்பது முதுமொழி. அண்மையில் ஏற்பட்ட நிகழ்வு திட்டமிட்ட செயலாகும் என்பதில் ஐயமில்லை.

இன்று அகவை ஐம்பதை கொண்டாடும் எனது நண்பர் வரதர் இன்னும் பல ஆண்டுகள் மாணவ சமுதாயத்திற்கு சேவை புரிந்து பல்லாண்டு காலம் சிறப்புற வாழ நான் வாழ்த்துகின்றேன்.



நன்றி

V.T.இராஜேந்திரா
(ஒப்பம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஞா.இரட்ணசிங்கம்
ஆசிரிய ஆலோசகர்,
விஞ்ஞானபாடம்
யாழ் வலயம்.

## பணி தொடர்க! பல்லாண்டு வாழ்க!

"ஆசிரியர்கள் பிறக்கின்றார்களா அல்லது உருவாக்கப்படுகின்றார்களா" என்பது இன்று வரை கேள்விக்குறியாகவே இருக்கின்றது எது எப்படி இருப்பினும் நிர்வாகத்திறமையுடனான ஆசிரியத்துவம் என்பது அரிதாகவே கிடைக்கின்றது இந்த வகையில் இன்று பொன்விழாக்காணும் திரு.வரதராஜா அவர்கள் இவை இரண்டும் வாய்க்கப்பெற்ற ஓர் பொக்கிசமாகவே மாணவர்களிடம் மட்டுமன்றி பெற்றோர் மத்தியிலும் போற்றப்பட்டு வருகின்றார்

அவருடைய சேவை நாட்டுக்கு இன்னமும் தேவையாக இருக்கின்றது நாட்டுச்சூழ்நிலை காரணமாக இடம் பெயர்ந்து வவுனியாவில் இரம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் இருந்தகாலத்திலும் சரி யாழ் மத்திய கல்லூரியிலும் சரி தன்னுடைய கல்விநிலையத்திலும் சரி தன் பணியால் தனக்கும் கற்ற மாணவருக்கும் கற்பித்த ஆசிரியருக்கும் பெருமை தேடிக்கொடுத்த அவர் பணிமேலும் தொடரவும் அவர் பல்லாண்டு காலம் வாழ்ந்துகுடும்பத்தினருடன் சுகமாக இருக்கவும் ஆண்டவனை வேண்டுகின்றேன்.



நன்றி

அன்புடன்
ஞா.இரட்ணசிங்கம்
(ஒப்பம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ்.கே.சண்முகலிங்கம் J.P (அதிபர்)
யாழ் புங்குடுதீவு
ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம்

# “நல்லதொரு கணித ஆசான்”

எனது நெஞ்சிற்கு நெருக்கமான நண்பர் திரு.த.வரதராஜா அவர்கள் அகவை ஐம்பதை பூர்த்தி செய்து பொன்விழாக் காண்பதையிட்டு உள்ளம் உவகை கொள்கின்றது. நண்பன் வரதன் உடன் பலாலி ஆசிரியர் கலாசாலையில் 1982-1983ம் ஆண்டு வரையும் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. அதனைத் தொடர்ந்து அவருடைய இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டில் ஓர் விஞ்ஞான ஆசிரியராக 1989ஆம் ஆண்டு தொடக்கம் 1997 வரையும் கடமை புரியும் வாய்ப்பு கிட்டியது. இவருடைய சிந்தனை, சொல், செயல் மூன்றும் ஒன்றாக அமைந்து நல்லதையே சிந்தித்து சொல்லி செய்து காட்டும் ஓர் உத்தமன் கடந்த 32 வருடங்களாக தனது கல்வி நிறுவனத்திலும் சரி அரசாங்க பாடசாலைகளிலும் கணித ஆசிரியராக கடமை புரிவதால் அவருடைய கற்பித்தல் நுட்பத்தாலும், மாணவரை நற்பிரஜையாக மாற்றும் எண்ணத்தாலும், பெற்றோர்களின் ஆதரவுமே தனது எழுச்சிக்கு காரணம் எனக் கூறுவார். “கணித வரதன்” என்று சொன்னால் தமிழ் ஈழத்தில் மட்டுமல்ல வெளிநாடுகளில் வாழ்கின்றவர்களுக்கும் தெரியாதவர்கள் எவரும் இருக்கமாட்டார்கள். காரணம் சிறந்த ஓர் நிர்வாகியாக தனது கல்வி நிலையத்தை வளப்படுத்தி வருவதுடன் அன்றும், இன்றும் மாணவச் செல்வங்களுக்கு கணித ஆசானாக இருந்து இலகு முறையில் கற்பித்துக் கொடுப்பதால் க.பொ.த பரீட்சையில் அவருடைய நிறுவனத்தில் சித்தியடையும் வீதமும் உயர்வடைந்தே செல்கின்றது. இதே போன்று தான் பாடசாலையிலும் எந்த நிலையில் உள்ள மாணவருக்கும் கணித பாடத்தை இலகுவாக புகுத்தும் ஆற்றல் உடையவர். இவற்றின் மூலமே “கணித வரதன்” என்றும் பெயர் பெற்றவர். கலங்கரை விளக்குகள் போல் விளங்கும், இவர்கள் தான் கலக்கமும், குழப்பமும் நிறைந்த இன்றைய மாணவ சமுதாயத்திற்கு வழிகாட்டிகளாக விளங்குகின்றார்கள் என்பதில் இரண்டுபட்ட கருத்து இருக்க முடியாது.

நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனாய் பண்பிலே தெய்வமாகப் பார்வையிலே சேவகனாய் எம்மோடு எம்மத்தியிலே வாழ்ந்து வரும் என் இனிய நண்பன் கணித வரதன் அவர்கள் சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடுழி காலம் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றேன்.



நன்றி

நண்பன்
எஸ்.கே.சண்முகலிங்கம்
(ஒப்பம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லயன் F.A சில்வெஸ்ரர்
கோப்பாய் லயன்ஸ் கழகம்
கோப்பாய்

லயன் T.வரதராஜா அவர்களின் பொன்விழாவையிட்டு வெளியிடப்படும் பொன்விழா மலருக்கு நான்இச்சிறிய ஆசிச் செய்தியை அளிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன் அவரையும் அவரது குடும்பத்தினரையும் சிறு வயதிலிருந்தே நன்றாகத் தெரிந்தவன் என்ற முறையிலும் சென்ற ஐந்து வருடங்களாக கோப்பாய் லயன்ஸ் கழகத்தினோடு சேர்ந்து இயங்கியவர் என்ற வகையிலும் இச்செய்தியை வெளியிடுவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன் அரிமாக்கழக செயற்பாட்டைப் பொறுத்த வரையில் அவர் கல்வியில் அக்கறையுடைய மாணவர்களுக்கு அளப்பரிய சேவையை ஆற்றியுள்ளார் மாணவர் கற்று முன்னுக்கு வரவேண்டும் என்ற மனப்பாங்குடன் செயற்பட்டு வசதிகுறைந்த வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ள மாணவர்களைத் தெரிவு செய்து இலவசக் கல்வியை தொடர்ந்து கொடுத்து வருகின்றார் இவ்வாறு கல்விக்கு சகல விதத்திலும் ஊக்கமும் ஆக்கமும் அளித்து வரும் நண்பன் T.வரதராஜர் அவர்கள் மென்மேலும் வாழ்க்கையில் உயர்ச்சி பெற்று சகலவிதமான சௌபாக் கியத்துடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றேன்.



நன்றி

F.A சில்வெஸ்ரர்(ஒப்பம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழா நாயகனின் ஏற்புரை

வாழ்வின் அரை நூற்றாண்டைக் கடந்த இக்காலத்தில் எனது சேவையை நினைவு கூஉந்து இந்தப் பொன்விழாவை ஒழுங்கு செய்து நடாத்தும் அன்பு உள்ளங்களின் அன்புக்கட்டளையை நான் மதிக்கின்றேன்.

இன்றைய நிலையில் எமது நாட்டில் மட்டுமல்ல உலகின் பலபகுதிகளில் இலட்சக்கணக்கான மக்கள் தம் அன்புக்குரியவர்களை இழந்தும் அடிப்படை வசதிகள் எதுவும் அற்ற நிலையிலும், அடுத்த நாள் எப்படிப்பிறக்கும் என்ற ஏக்கத்திலும் வாழும் ஒரு சூழ்நிலையில் இப்படி ஒருவிழா எடுத்து நாம் மகிழ்ந்திருப்பது பொருத்தமானதாக எனக்கு தோன்றவில்லை.

இப் பொன்விழாக்குழுவை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்ட எனது நிறுவன ஆசிரியர்கள் சிலர் என்னிடம் அணுகி இதற்கான அனுமதியைக் கோரியபோதும் நான் அதனையே காரணம் கூறி மறுத்திருந்தேன்.

ஆனால் அவர்கள் ஒருவர், இருவர் என்ற நிலை மாறி தங்களின் பலத்தை அதிகரித்து மாணவர் பழைய மாணவர், பெற்றோர் ஆகியோரின் கூட்டான விருப்பம் இது என ஒன்றுகூடி வந்தபோது அவர்களின் மனதிலுள்ள ஆசைகள் நன்றியுணர்வுகளை வெளிக்காட்டும் ஒரு சந்தர்ப்பம் இது, வாழ்வில் எமக்குக்கிடைத்த இந்த சந்தர்ப்பத்தை நாம் செய்து மகிழ்வதற்கு நீங்கள் அனுமதி தரவேண்டும் என ஒட்டு மொத்தமாக விடுத்த கோரிக்கையை என்னால் மறுக்க முடியாமலேயே இந்நிகழ்விற்கு ஒருசில நிபந்தனைகளுடன் சம்மதம் தெரிவித்தேன்.

ஒருபுறம் தற்போதைய சூழலையும் மறுபுறம் இவ்அன்பு உள்ளங்களின் விருப்பங்களையும் எண்ணிப்பார்த்தேன். அதனாலேயே பெருவிழாவாக நடாத்துவதற்கு இட்ட திட்டங்களை எல்லாம் மாற்றி குறைக்குமாறு கேட்டு ஒரு சிறு நிகழ்வாக இவ் விழாவை நடாத்துவதற்கு சம்மதம் தெரிவித்தேன்.

என்னைப் பொறுத்தவரை மற்றவர்கள் கணக்கெடுக்க வேண்டும் என்ற நினைவில் செயலாற்றுபவன் அல்லன். கடவுள் ஒருவனுக்கு மட்டுமே நான் கணக்கு கொடுத்து நடக்கின்றேன். செய்யும் தொழிலே தெய்வம் அந்த திறமைதான் நமது செல்வம்;; என்ற நோக்கிலேயே நான் செயற்படுகின்றேன்.

யாருக்கும் நாம் பாதிப்பாக இருந்துவிடக்கூடாது, எம்மால் ஆனதை மற்றவர்களுக்கு முடியுமானவரை செய்தல்வேண்டும் என்ற எண்ணத்திலேயே இயங்குகின்றேன். எல்லோரும் இதனை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் இல்லை. இருப்பினும் தற்போது இவ்விழா ஏற்பாட்டின் மூலமும், இவ் அன்புள்ளங்களிலிருந்து வரும் உற்சாகப்படுத்தும் வாழ்த்துக்கள் மூலமும் எனது சேவையினூடு ஒரு சாதனை நிலைநாட்டப்பட்டுள்ளதை உணர்கின்றேன்

மனிதத்தன்மை உள்ளவர்கள் என்றுமே புரிவதைப் பாராட்டுவார்கள் அதேவேளை ஒருவரின் திறமைக்கு செலுத்தும் மரியாதையே பொறுமை ஆகும். இவை இரண்டையும் என் வாழ்நாளில் அதிகம் சந்தித்திருக்கிறேன்.

ஏதோ நானும் மற்றவர்களின் உயர்ச்சிக்கு ஒரு காரணியாக இருக்கிறேன் என்பதை அவர்கள் உறுதிப்படுத்துவதன் மூலம் எனது சேவையில் மனநிறைவு அடைகின்றேன்.

இவை எல்லாம் என் வாழ்வில் பல சந்தர்ப்பங்களாலும் காலம் காலமாக என் பழைய மாணவர்கள், பெற்றோர் வாயிலாக நான் கேட்டுக் கேட்டு பழக்கப்பட்டது வழமை. இருப்பினும் அவ்வாறான அன்பு உள்ளங்கள் அனைத்தையும் ஒன்றிணைத்து இந்த 50வது வயதின் பொன்விழாவாக என்னை கௌரவிக்க வழிசமைத்த இந்த பொன்விழாச் சபையின் குழுமாமாக விளங்கும் எனது கல்விநிறுவன ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், பழைய மாணவர்களின் செயற்பாடுகள் என்றும் என்னால் மறக்கமுடியாதவை ஒன்று. தொடர்ந்தும் உங்கள் சேவைக்காக நான் இங்கு செயலாற்றுவேன் என நன்றியுடன் தெரிவிக்கின்றேன்.

என்றும் அன்புடன்

த.வரதராஜா (ஒப்பம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுடன் நாங்கள்...

"என்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு"

பொன்விழா சிறப்பு மலர் பலவகையான பொற் கலசங்களை தாங்கி வந்துள்ளன என்று கூறினால் அதற்கு ஆசிச் செய்திகளும் ஆக்கங்களுமே காரணம் ஆகும். நாம் ஆசிச் செய்தி ஆக்கங்களைப் பெற்றுக் கொள்வதற்கு தங்களிடம் நாடிவந்த போது எம்மை சிறந்த முறையில் வரவேற்றதுடன் மட்டுமல்லாது அலுக்காது சினக்காது எமக்கு பலவகையான ஆலோசனைகளைக் கூறி தம் உள்ளங்களின் வெளிப்பாடுகளையும் இப் பொன்விழா மலரில் வெளிவர உதவிய அன்புள்ளங்களுக்கு எமது நன்றிகளை தலை வணங்கிக் கூறுகிறோம்.

இப்பொன்விழா சிறப்பு மலர் சிறப்புற அமைத்துத்தந்த "மதி கலர்ஸ்" அச்சகத்தினருக்கும் அங்குகடமை ஆற்றிய ஊழியர்களுக்கும் எமது உளங்கனிந்த உவப்பான நன்றிகள் உரித்தாகட்டும்

அதோடு இம்மலருக்கு விளம்பரங்களைத்தந்துதவிய விளம்பரதாரர்களுக்கும் அட்டைப்படத்தை மிகச்சிறப்புற அமைத்துத்தந்த "நந்தா கிரியேசன்ஸ்" உரிமையாளருக்கும் அவர் தம் தம்பணியாளர்களுக்கும் எமது பணிவான நன்றிகள்.

மேலும் இவ்விழாவிற்கு தங்கள் சிரமத்தை பாராமல் தகுந்த நேரத்துக்கு வருகை தந்து சிறந்த முறையில் ஒலி, ஒளி சேவையை வளங்கிய ஒலி, ஒளி அமைப்பாளர்களுக்கும் எமது நன்றிகள்.

அத்தோடு விழாவிற்கு வருகைதந்த பண்பாளர்களுக்கும் பெரியோர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பழைய மாணவர்களுக்கும் நலன் விரும்பிகளுக்கும், ஆசிரியர் களுக்கும் மாணவர்களுக்கும் அனைவருக்கும் எமது நன்றிகள்

மற்றும் விழாச் சிறக்க பல வகைகளிலும் பண உதவி உடல் உதவி புரிந்த சகல உள்ளங்களுக்கும் பொன்விழாச் சபையின் உள்ளார்ந்த நன்றிகள்

மேலும் புகைப்படப்பிடிப் பாளர்களுக்கும் வீடியோப் படப்பிடிப்பு உரிமையாளர் களுக்கும் அத்தோடு இந்நிகழ்வை தங்கள் பத்திரிகையில் பிரசுரித்த உதயன், வலம்புரி பத்திரிகை உரிமையாளர்களுக்கும் எமது நன்றிகள்

நன்றி

The Express Institute
Irupalai, Kopay.

இணைச்செயலாளர்கள்
வரதர் பொன்விழச்சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறுவனக்கீதம்

ராகம்: காபி

வாழிய வாழிய எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்
வாழிய வாழியவே
வளர்வுறு கலைகள் அழகுடன் ஊட்டும்
வனப்பினள் வாழியவே

யாழ் இருபாலை எழில்பெற வாய்ந்த
இனியவள் வாழியவே
எம் தமிழ்மக்கள் மாணவர் போற்றும்
இயல்பினள் வாழியவே

அறிவியல் துறையும் அழகியல் துறையும்
அரியநற் கலைத்துறையாவும்
உரிய நன்முறையில் ஊட்டியே வளர்க்கும்
உத்தமி வாழியவே

உடலியல் துறையும் கணிதநற்துறையும்
உயர்வுறு பல்கலை யாவும்
திடமுடன் ஊட்டி செயல் வழிகாட்டும்
செந்தமிழ் அன்னையே வாழ்க

அதிபரும் எங்கள் ஆசிரியர்கள்
அத்துடன்மாணவர் வாழ்க
மதிதரு கற்பகப் பிள்ளையார் அருள
மகிழ்வுடன் நாம் பயில்வோமே

ஆக்கம்
காரை செ.சுந்தரம்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இமயத்தை தொட்டீர்
வானத்தைத் தொட்டு வளமுடன் வாழி

# துயா நகைப்பூங்கா





213C, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

வயசுக்கு வரவேற்ப்பு சேவைக்கு வாழ்த்து
வாஞ்சையுடன் உம்மை வாழ்த்தும்

# வினோ



# நகைப்பூங்கா




185, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்விழா நாயகரின் வழிநடாத்தலில் உருவாகியுள்ள எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டின் செயற்பாடுகளின் சில காட்சிகள்



அச்சமைப்பு: மதி கலர்ஸ், நல்லூர் - 077 7222524

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org